விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 20 வியாழக்கிழமை (03.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

=3 JUN 2010

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## இரண்டாம் உலகப் போரில் வீசப்பட்ட குண்டு நேற்று வெடித்துச் சிதறியது

### மூவர் பலி; ஆறு பேர் படுகாயம்

(கொழும்பு)

இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனியின் மீது வீசப்பட்டும் வெடிக்காத குண்டு ஒன்று நேற்று வெடித்ததில் மூவர் உயிரிழந்தனர். அறுவர் காயமடைந்தனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் மத்திய ஜேர்மனியில் உள்ள கோயெட்டி ஜென் நகரில் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குண்டு அங்கு கிடந்தமை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. 500 கிலோ எடையுள்ள அந்தக் குண்டைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் வெடி குண்டு நிபுணர்கள் ஈடுபட்டனர்.

இதற்காக அப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக அந்தக் குண்டு பயங்கரமாக வெடித்தது. இதில் மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஆறு பேர் (18 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னிப் பிரதேச மாணவர்கள்

## தமது பாடசாலையின் ஊடாகவே சா/த பரீட்சைக்கு தோற்ற முடியும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து தற்போது தங்கியிருக்கும் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பரீட்சை விண்ணப்பங்களைத் தமது சொந்தப் பாடசாலையூடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு மற்றும் மடு கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களில் பலர் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இணைந்து கல்வி கற்று வருகின்றனர்.

இம் மாணவர் (18 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்தவுடன் பேச

# கூட்டமைப்புத் தயார் நிலையில்

### சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுத் திட்டம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராகவுள்ளதாக நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பிரீஸுடன் தான் இது தொடர்பில் பேச்சு நடத்தியதாகவும் அவர் கூறுகின்றார். பேராசிரியர் பிரீஸுடனான சந்திப்பின் போது அரசியல் தீர்வு தொடர்பாகவும் ஒரு ஆரம்ப முறையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது எனவும் சம்பந்தன் கூறியுள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினையில் அரசின் செயற்பாடு திருப்தியில்லை

### கலைஞரின் முடிபுக்குக் கூட்டமைப்பு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தியாவுக்கான பயணம் இடம்பெறும் சமயத்தில் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி எடுத்திருக்கின்ற முடிபுக்கு வரவேற்புத் தெரிவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளில் மனநிறைவு இல்லை என்ற அடிப்படையில் தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி தலைமையில் கூடிய தி.மு.க. அதியுயர் பீடம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

யுத்தத்திற்குப் (18 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு முஸ்லிம்கள் ஜூன் 7 இல் மீள்குடியமர்வு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களை மீள் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற உயர் மட்ட மாநாட்டில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் முல்லைத்தீவு மர்வட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் மீள்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்த மாநாட்டின் போது முல்லைத் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை விசாரணைக் குழுவின் செயற்பாடுகள் மீது நம்பிக்கையில்லை!

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களுக்கும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான ஆணையாளரின் அழுத்தத்திற்கு மத்தியில் இலங்கையில் மனித உரிமைமீறல்கள் இடம்பெற்றதா? என்பதை விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு மீது நம்பிக்கையில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அச்சம் வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறு ஆணைக் குழு நியமிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் இரண்டு வருடங்கள் நடைபெற்ற நிலையில் அது முடங்கிக் கிடப்பதாகச் சுட்டிக்காட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, இதனைப் போலவே தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவின் செயற்பாடுகளும் அமையும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடமிருந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களைச் சுமந்த வேளையில் அன்றைய சூழ்நிலையில் நிலைமையினைச் சமாளிப்பதற்காக (18 ஆம் பக்கம் பார்க்க)

‘சனிக்கிழமை வங்கிச் சேவை’ ஆரம்பம்

DFCC வர்தன வங்கி, DFCC வங்கி, யாழ்ப்பாணக் கிளை

அரச, தனியார் ஊழியர்கள், வர்த்தகப் பெருமக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனைத்து மக்களின் நன்மை கருதி எமது தினசரி வங்கிச் செயற்பாடுகள் சனிக்கிழமைகளிலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. 05.06.2010 சனிக்கிழமை முதல் சகல சனிக்கிழமைகளிலும் காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை எமது வங்கிச் சேவை நடைபெறும் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.



DFCC வர்தன் வங்கி

141, K.K.S. ROAD, JAFFNA.

DFCC வங்கி

முகாமையாளர்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


கிளிநொச்சி தருமபுரம் பகுதிக்குச்சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் அப்பகுதி மக்கள் மனு கையளிப்பதையும் சேதமடைந்த வீடொன்றை அவர் பார்வையிடுவதையும் மீளக்குடியமர்ந்த மக்களையும் படங்களில் காணலாம்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என வதந்தி!

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் எந்தவொரு பிளவும் கிடையாது என்று அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் திட்டவட்டமாக நேற்று தெரிவித்தார்.

அரசினால் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு முன்வைக்கப்படுமாக இருந்தால் அத்தீர்வை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுக்கு பெற்றுக் கொடுக்கும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு ஓரிரு நாட்களுக்கு முன் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

எப்போதும் எதிர்ப்பு அரசியலையே முன்னெடுத்துவந்த கூட்டமைப்புக்குள் சம்பந்தரின் இக்கருத்தினால் பிளவு நிலை வெடித்துள்ளது என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் அவர் இப்படி ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டார் எனக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் அதிருப்தியின் உச்சத்திற்கே சென்று விட்டார்கள் என்றும் எந்த நேரமும் அவர்கள் கூட்டமைப்பை விட்டு விலக கூடும் என்றும் அவ்வூடகங்களின் செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் இது குறித்து விளக்கம் அளித்த போதே அரியநேத்திரன் எம்.பி.கூட்டமைப்புக்குள் ஏந்தப் பிளவுமே கிடையாது என்று உறுதியாகக் கூறினார்.

அவர் இது குறித்துத் தெரித்தவை வருமாறு,

சம்பந்தர் ஐயா அரசை எல்லா விடயங்களிலும் ஆதரிப்பார் என்று கூறியிருக்கவில்லை. மாறாக தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில், உரிய தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கு தான் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கும் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இது மிகவும் தூர நோக்கும் தெளிந்த சிந்தனையும், அரசியல் சாணக்கியமும் மிகுந்த நிலைப்பாடாகும். எனவே அவரின் இந்தக் கருத்தினால் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை.

அவரின் நிலைப்பாடே கட்சியின் நிலைப்பாடாகும் அவர் ஒருபோதும் கட்சியை தவறாக வழிநடத்தவே மாட்டார் என்பது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாக உள்ளோம்.

கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என்பதெல்லாம் வெறும் வதந்திகளே. இன்று, நேற்று அல்ல. 2004ஆம் ஆண்டு முதலே இதே கூட்டமைப்பு உடைந்து விட்டது என்றெல்லாம் கட்டுகதைகளைப்பரப்பி வருகிறார்கள். கூட்டமைப்பு உடைந்து விடவேண்டும் என்று பேரினவாதிகளும் தமிழின விரோதிகளும் பேரவாப்படுகின்றார்கள். நாம் இதற்கு ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டோம்.

அரசியல் பேச்சுக்கான காலம் கனிந்து வருகின்ற நிலையில் இவ்வாறான விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை கவலைதருகின்றது. ஆனால் தமிழர்கள் இவ்வாறான பிரசாரங்களை நம்பி ஏமாறவோ குழப்பமடையவோ தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## புதிய அதிபர் நியமனம்

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் யாழ்.சென் பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலைக்கு புதிய அதிபராக அருட்சகோதரி ஏ.ஞானதர்சினி நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய அருட்சகோதரி மரியமலர் ஜோசப் ஓய்வு பெற்றுச்செல்வதையடுத்து இவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-4)

## புங்குடுதீவு கடலில் சடலம் மீட்பு

புங்குடுதீவு 2ஆம் வட்டாரக்கடல் பகுதியில் கரையொதுங்கிய சடலம் ஒன்று மீட்கப்பட்டு அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. நேற்றுபிற்பகல் கரையொதுங்கிய சடலத்தை கண்ட கடற்படையினர் இது குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

நீதிமன்ற அனுமதியுடன் புங்குடுதீவுக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைமீட்டு யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைத்தனர். கால்பகுதியும் முகமும் உருக்குலைந்து காணப்படும் இச் சடலத்தில் வட்டக் கழுத்தையுடைய பச்சை நிற ரி சேட் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (ச-246)

# ‘பெற்றோருடன் சேர்ந்து வாழ முடியாது’ 12 வயது சிறுமி நீதிமன்றில் மனு தாக்கல்

(மட்டக்களப்பு)

பெற்றோருடன் சேர்ந்துவாழமுடியாது என்று தெரிவித்து 12 வயதுடைய முஸ்லிம் சிறுமி ஒருவர் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வாக்குமூலம் வழங்கினார். பெற்றோர் அடித்து சித்திரவதை செய்கின்றனர் என்றும் பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்திருந்து எந்நேரமும் வேலை வாங்குகின்றனர் என்றும் அவர் அவ் வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

அந்தநேரம் சிறுமியின் பெற்றோரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர் இவ் வழக்கு கல்முனை நீதவான் முகமெட் ரிஸ்வி முன்னிலையில் இடம் பெற்றது.

சிறுமியைஆதரித்துநோர்வேஅகதிகள்கவுன்சிலின் சட்ட ஆலோசகர்களான சட்டத்தரணி ஆரிக்கா காரியப்பர், சட்டத்தரணி பிரேம் நஸீர் ஆகியோர் ஆஜராகி வாதாடினர்.

பெற்றோரின் சார்வில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஏ.எம்.பதுறுதீன், எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா ஆகியோர் ஆஜராகி வாதாடினர்.

சிரேஷ்ட சட்டத்தரணி அன்சார் மௌலானா அவருடைய வாதத்தில் சிறுமியின் உரிமைகள் நிச்சயம் பாதுகாக்கப்படத்தான் வேண்டும். ஆனால் குடும்ப அலகையும் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும்.

சிறுமி ஒழுக்கத்திற்கு புறம்பான சில செயல்களைச் செய்தார். ஆகவே தான் பெற்றோர் அவரைக் கண்டித்தனர். நீதிமன்றம் பெற்றோருக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டும். அவருடன் சிறுமியை அனுப்பி வைக்கவேண்டும் என்று முன்வைத்தார்.

சிறுமியின் வாக்குமூலம், பெற்றோர் தரப்பு நியாயம் ஆகியவற்றை கவனமாக செவிமடுத்த நீதவான் குறித்த பெற்றோரை கடுமையாக எச்சரித்தார். சிறுமியை எந்தவிதத்திலும் துன்புறுத்தவோ புண்படுத்தவோ கூடாது என்று அவர்களுக்கு உத்தரவிட்டார்.

அவர் சிறுமிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அடுத்தவாரம் வரை பெற்றோரிடம் தங்கியிருந்து பார்க்கும் படி ஆலோசனை கூறினார்.

பெற்றோர் அவரை துன்புறுத்துகின்றனரா என்பதை பொலிஸாரும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அக்காலபகுதியில் நாளாந்தம் வீட்டுக்குச்சென்று அவதானிப்பார்கள் என்றும் அவர் சிறுமிக்கு வாக்குறுதி வழங்கினார்.

அதையடுத்து அடுத்த ஒருவாரம் வரைக்கும் பெற்றோருடன் இருந்து பார்க்க இனங்கினார். சிறுமி பெற்றோருடன் அனுப்பிவைக் கப்பட்டார்.

இச்சிறுமி மருதமுனையைச்சேர்ந்தவர். இவரின் தந்தை கூலி வேலை செய்கிறார். பெற்றோருக்கு இன்னும் ஒரு கைக்குழந்தை உண்டு. இந்நிலையில் பிரஸ்தாப சிறுமி கல்முனையிலுள்ள குடும்பநல உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்குச் சென்று பெற்றோர் அவரை இவ்வாறெல்லாம் துன்புறுத்துகின்றனர் என்று முறைபாடு ஒன்றை மேற்கொண்டு இருந்தார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சிறுமியையும் பெற்றோரையும் சேர்த்துவைக்க பகீரத முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அவை தோல்வியில் முடிந்தன. இந்நிலையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் முறைப்பாடு ஒன்றை சிறுமியின் சார்பில் கல்முனைப் பொலிஸ்நிலையத்தில் மேற்கொண்டனர்.

இதையடுத்து கல்முனை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப்பிரிவு பொலிஸார். குறித்த பெற்றோருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கு இடம்பெற்றபோது நீதிமன்றம் மிகவும் பரபரப்பாக காணப்பட்டது. (ச-5)

# இடைவிலகிய மாணவர்களை கற்பிக்க திறந்த பாடசாலை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலிருந்து இடை விலகிய மாணவர்களிற்கு தொலைக்கல்வி மூலம் கற்பிப்பதற்கான திறந்த பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு நாளை 4ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சும், தேசிய கல்வி நிறுவனமும் இணைந்து மேற்படி திறந்த பாடசாலையை ஆரம்பித்து வைக்கின்றனர்.

இதன் மூலம் பாடசாலை இடை விலகிய மாணவர்களை கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைக்கு தோற்றும் வகையில் தொலைக்கல்வி மூலம் சிறந்த கல்வி வழங்கப்படவுள்ளது. (ச-5)

# பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இவ் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக யாழ். பிரதேச செயலக கிளையை சேர்ந்த வீ.ஸ்ரீசக்திவேல், உபதலைவராக கரவெட்டி பிரதேச செயலக கிளையைச் சேர்ந்த வி.வீரசிங்கம், செயலாளராக உடுவில் பிரதேச செயலக கிளையைச் சேர்ந்த பொ.கமலநாதன், உபசெயலாளராக நல்லூர் பிரதேசசெயலக கிளையைச்சேர்ந்த செ.சந்திரசேகரம், பொருளாளராக யாழ்ப்பாண பிரதேச செயலக கிளையைச்சேர்ந்த சு.கணேசலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சபை உறுப்பினர்களாக கோப்பாய் பிரதேச செயலக கிளையைச்சேர்ந்த மா.புவனேந்திரன், சங்கானை பிரதேச செயலக கிளையைச் சேர்ந்த அ.துரைரட்ணசிங்கம் மற்றும் கணக்குப்பரிசோதகராக வலி. வடக்கு பிரதேச செயலக கிளையைச்சேர்ந்த அ.நற்குணநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4)


**இலவச ஆலோசனை**

வேலைவாய்ப்புடன் லண்டனில் உயர்கல்வி MARKETING OFFICER வேலைவாய்ப்பு ,IELTS வகுப்புகள்.

தொடர்புகொள்க:கா.ஜீவலிங்கம்

(1622) 0770711281

**ஆனந்தி திருமணசேவை**

**மணமகன் வேண்டும்**

1973-ல் பிறந்த பூர நட்சத்திரம் செவ்வாய் தோஷமற்ற ,கிரக பாவம் 28 1/4 , வணிகப் பட்டாரி ஆசிரியைக்கு பொருத்தமான ஆண்மகனை உள்நாடு /வெளிநாட்டிலும் நாடுகின்றோம். அஞ்சல்,நேரடி ,தொலைபேசி (021222 8708) மூலமும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. V.A. சிவராசா ஜோதிடர் 56,அம்மன் றோட், கந்தர்மடம் ,யாழ்ப்பாணம்.

(1616)

# இன்று ஒரு தகவல்

## மூன்று இடையூறுகள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார்: ''இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி!ஒரு நல்லவன்–ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி! இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி!'' என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

இதற்கு என்ன விளக்கம்? என்றேன்.

அதன் பின் அவர் விளக்கம் கொடுத்தார்.

அதாவது,

ஒரு ஒற்றையடிப் பாதையில் எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அது ஒரு வரப்பு என்று வைத்துக் கொள்ளுங்களேன். அவர்களிருவரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக் கொள்ள வேண்டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் அவ்விருவருமே நல்லவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அவர் என்ன பண்ணுவர். இவர் நேராக பாதையில் வரட்டும் என்று வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன பண்ணுவார். அவர் பாதையில் வரட்டும் என்று விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவரும் இவருக்காக அவரும் விட்டுக் கொடுக்கிறார்கள்.

ஆக, அவர்வரும் பாதை ஒன்று. இவர் போகும் பாதை ஒன்று. நடுவில் ஏற்கனவே உள்ள பாதை ஒன்று. மொத்தம் மூன்று பாதை.

அதுதான் இர ண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது.

ஒரு நல்லவன் - ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி.

இது எப்படியென்றால் ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரில் ஒருத்தன் நல்லவன். ஒருத்தன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரில் வருபவனுக்கு வழி விடுவான்.

கெட்டவன் வரப்பை விட்டு கீழே இறங்கமாட்டான். அவன் இறங்கட்டுமே நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான்.

இப்பொழுது இரண்டு பாதை தான் உண்டு.

இது தான் ஒரு நல்லவன்–ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது எப்படித் தெரியுமா?

ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். இருவரும் வரப்பை விட்டுக் கீழிறங்கமாட்டார்கள்.

இவன் இறங்கட்டும் என்று அவனும் அவன் இறங்கட்டும் என்று இவனும் இருப்பார்கள். இருவரும் ஒரே பாதையில் தான் வந்து கொண்டிருப்பார்கள். இது தான் இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது.

இப்பொழுது தான் அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

அதாவது, நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன்.

நாம் ஒரு காரியத்தைத் தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அதற்கு மூன்று வகையில் இடைஞ்சல் வரலாமாம்.

நம்மாலேயே வரும் இடைஞ்சல் ஒருவகை–இது ஆத்யாத்மிகம்.

நம்மைத் தவிர மற்றவர்களால் வரும் இடைஞ்சல் ஒருவகை–இது ஆதி பௌதிகம்.

இயற்கையாக வரும் இடைஞ்சல் மூன்றாவது ரகம்– அதற்குப் பெயர் ஆதி தெய்வீகம்.

நமக்குப் பிடித்த ஒரு நல்ல சினிமாப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம் – என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்தச் சமயம் நமக்கு வயிறு வலிக்கிறது– இது நம்மிடமிருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தச்சமயம் பார்த்து பக்கத்தில் இருப்பவர்கள் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது அடுத்தவர்களால் வரும் இடைஞ்சல்.

இந்தச் சமயம் பார்த்து இடி, மின்னல், பூகம்பம்–கரண்ட் போய் விடுகிறது.

இது இயற்கை உண்டுபண்ணும் இடைஞ்சல். இப்படி மூன்று வகைகளில் இடைஞ்சல் வரக்கூடாதென்பதற்காகத் தான் பெரியவர்கள் சாந்தி–சாந்தி–சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### வடமாகாண

# பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் குறுந்திரைப்படப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் குறுந்திரைப்பப் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியாளர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்ராக இருப்பதுடன் குறுந்திரைப்படம் 5 நிமிடத்திற்கு குறையாமலும் 7 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் கருப்பொருளில் அரசியல் கருத்துக்கள் பயன்படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் குறுந்திரைப் படத்தை இறுவட்டில் பதிவு செய்து 2 பிரதிகள் அனுப்புதல் வேண்டும். ஒருவர் எத்தனை குறுந்திரைப்படங்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.

இக் குறுந்திரைப்படமானது திருகோணமலையில் உள்ள வடமாகாண விவசாய அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் இரசிகர்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்ட தகுதி வாய்ந்த நடுவர்களினால் மதிப்பீடு செய்யப்படவுள்ளதுடன் இதன் போது இயக்குநர் வருகையும் இடம்பெறல் வேண்டும்.

மேலும் போட்டியில் தெரிவு செய்யப்படும் குறுந்திரைப் படங் களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களை எதிர்வரும் ஜுலை மாதம் 15 திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல கலாசார உத்தியோகத்தர்களும் தங்களுக்கு கிடைக்கும் ஆக்கங்களை எதிர்வரும் ஜுலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்திற்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 0263266990 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம் எனவும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (6-4-7)

### மலேசியாவிலுள்ள

# இலங்கை அகதிகள் நாடு திரும்ப மறுப்பு ?

மலேஷியக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்புவதை நிராகரித்துள்ளதாக மலேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் டீ.டீ. ரணசிங்க தெரிவிக்கிறார்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்களைத் தமது அதிகாரிகள் சந்தித்த போதே அவர்கள் இலங்கை திரும்புவதை நிராகரித்ததாக குறிப்பிட்டார்.

அவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறினார். தம்மை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டாமென்பது முதலாவது கோரிக்கையாகும்.

தற்காலிகமாக மலேஷியாவில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தர வேண்டுமெனவும் வேறு நாடுகளுக்குத் தம்மை அனுப்பி வைக்குமாறும் கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையினால் அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களை இலங்கை மட்டுமே பொறுப்பேற்குமெனினும் இவர்கள் மீண்டும் இலங்கை வர விரும்பவில்லையென இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்த போது குறித்த இலங்கையர்கள் மலேஷியக் கடற்பரப்பில் வைத்து அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

75 பேரடங்கிய இந்த இலங்கையர் குழு தற்போது மலேசியாவிலுள்ள முகாமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (6-4)

### சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு

# யாழ். கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சுற்றாடல் தின விழிப்புணர்வு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமையன்று யாழ். கல்வி வலயத்தால் சுற்றாடல் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இவ் விழிப்புணர்வு ஊர்வலத்தில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த 200 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

காலை 8 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் இருந்து தெருக்கூத்துக்கள் ஊடான ஊர்வலம் ஆரம்பித்து யாழ். ஆஸ்பத்திரி வழியாக சத்திரச் சந்தி ஊடாக கோட்டையைச் சென்றடையவுள்ளது.

டெங்கு ஒழிப்பு, பொலித்தின் பாவனையை குறைத்தல், சூழல் மாசடைவதை குறைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாக இச் சுற்றாடல் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (6-7)

# இராசி பலன்

*03-06-2010*
*(வைகாசி 20, வியாழக்கிழமை)*
*சஷ்டி முற்பகல் 11.54 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 12.10 மணிவரை*
*இராகுகாலம் 1.22-2.52 மணிவரை*
*சுபநேரம் 7.22-8.52 மணிவரை*
*யாழ் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கொடி, சந்திவெளி சித்தி விநாயகர் கொடி.*

| | |
|---|---|
| மேடம் | தனதானிய சேர்க்கை, பெரியோர் உதவி, காரிய அனுகூலம், தேகநலன். |
| இடபம் | கடின முயற்சி, தூரதேசச் செய்தி, போசன சுகம், ஆரோக்கியநிலை. |
| மிதுனம் | அதிக பிரயாசை, அஜீரணக் கோளாறு, பிரயாண சுகம், பெரியோர் சந்திப்பு. |
| கடகம் | அச்சமான நிலை, தொழில் நன்மை, உடல் நலக் குறைவு, தனவிரயம். |
| சிங்கம் | உறவினர் வருகை, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, விருந்துபசாரம். |
| கன்னி | பணவருவாய், சத்துருஜெயம், முயற்சி கைகூடும், பெருமையடைதல். |
| துலாம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, வீண்பகை. |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், ரோகநிலை, அதிகபிரயாசை, சுபசெலவு. |
| தனுசு | இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, வாகன சுகம், வாக்குமேன்மை. |
| மகரம் | கோபப்படுதல், அதிகசெலவு, எடுத்த காரியம் தாமதமாகும், ரோகநிலை. |
| கும்பம் | ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, போசன நன்மை. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், தொழில் நன்மை, பிரயாணம், உறவினர் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 105 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 90 | 95 |
| கரட் | 150 | 160 | 150 |
| பூசனி | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 80 | 55 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 45 |
| பயற்றங்காய் | 140 | 150 | 75 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 |
| பீற்றூட் | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 220 | 240 | 230 |
| போஞ்சி | 180 | 200 | 190 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 10

நுவரெலியா ஹோம்வூட் தமிழ் வித்தியாலயத்திலிருந்து, வந்தபாதை வழியே பஸ் பயணம் தொடர்ந்தது. இராப்போசனத்தை முடித்துக் கொண்டு இரவு 9 மணிக்கு பண்டாரவளை நோக்கிப் பயணித்த பஸ்வண்டி இரவு 11.30 மணிக்கு பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தை அடைந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள திருமண


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

மண்டபங்கள் போன்ற அமைப்பில் அந்த மண்டபம் அமைக்கப்பட்டிருந்தாலும், அந்த மண்டபத்தின் அழகு பிரமாதம் போல காட்சி கொடுத்தது.

எல்லாமே அப்படித்தான். எங்களிடம் உள்ள சிறப்பை விடுத்து மற்றைய தன் சிறப்பை உயர்த்தும் மனநிலை மனிதர்களிடம் இருக்கவே செய்கின்றது.

அந்த மனித இயல்பிலிருந்து நாமும் விடுபட முடியவில்லை.

பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் தங்கினோம். மறுநாள் 07.05.2010 அன்று அதிகாலை 5.30 மணிக்கெல்லாம் பயணத்திற்காகத் தயாராகி விட்டோம்.

பண்டாரவளை இந்துகலாசார மண்டபத்திற்கு முன்பாக முருகன் கோவில். காலைப் பிரார்த்தனை முருகன் ஆலய


பாடசாலையின் நுழைவாயிலில்

முன்றலில் நடைபெற்றது. வழமைபோல் தேவாரத் திருமுறையும், கிறிஸ்தவ கீதமும் இசைக்கப்பட்டன.

அதிகாலைப்பொழுது. குளிர் நிறைந்த பண்டாரவளையில் திருமுறைப் பாராயணம் இசைக்க வழிபாடாற்றப்பட்ட நிகழ்வு அற்புதமானது. நிறைந்த மன நிலையோடு பஸ்பயணம் தொடர்ந் தது.

நமுணுகுள சிங்கள வித்தியாலயத்தை தரிசிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்தப் பாடசாலையின் அதிபராக உடுவர பஞ்ஞா ஹெட்டி என்ற பௌத்த தேரர் பணி செய்கின்றார்.

பாடசாலையின் உள்ளும் புறமுமான சூழல் மிகவும் வித்தியாசமாக அமைந்திருந்தது.

பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்கள் வரவேற்பளித்தனர்.

பாடசாலை எங்கும் மரங்களின் சோலை. அந்தச் சோலையில் பூக்களின் நறுமணங்கள். மாணவர்களின் வெள்ளை உள்ளங்கள் எங்கள் எல்லோரையும் பிரமிக்க வைத்தன.

## மும்மொழி அமுலாக்கம்

இது நமுணுகுள சிங்கள வித்தியாலயம் என்று எங்களுக்கு அறிமுகப் படுத்தியிருந்தாலும் அதனை எங்களால் நம்ப முடியவில்லை.

சிங்கள வித்தியாலயம் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழில் எழுதப் பட்ட வாசகங்களே அங்கு அதிகம் காணப் பட்டன.இத் தமிழ் வாசகங்களே எங்களைக் குழப்பத்திற்கு ஆளாக்கின. தனித்து தமிழ் வசனங்கள் மட்டுமல்ல, சிங்கள ஆங்கில மொழிகளிலும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

பாடசாலையின் வளாகத்திலுள்ள மரங்கள்,செடிகள், கட்டடச் சுவர்கள் என எங்கும் காட்சிப்படுத்தல் பாப் போர் உள்ளங்களை ஈர்த்து ஆட்கொண்டன.

பாடசாலையின் நுழைவாயிலைக் கடந்து சென்ற போது *தாமதத்திற்கு மன்னிக்கவும்* என்ற வாசகம் அங்குள்ள தண்ணீர்த் தடாகத்தின் பகுதியில் பொருத்தப்பட்டிருந்தது. சிங்கள வித்தியாலயத்தில் *தாமதத்திற்கு மன்னிக்கவும்* என்று தமிழில் எழுதப் பட்டிருந்தமை எங்கள் அத்தனை பேரை யும் ஒருகணம் தன்பால் ஈர்த்துக் கொண்டது.

தமிழுக்கான முன்னுரிமை அங்கு பல இடங்களில் காணப்பட்டமை. அதிசயமான உண்மைதான். தமிழ் மாணவர்களும் அந்தப் பாடசாலையில் கற்கின்றனர்.

சிங்கள மொழியில் கற்கும் தமிழ் மாணவர்களின் நோக்கமெல்லாம் தமிழர்கள் சிங்கள மொழியில் புலமை பெற்றிருந்தால் அரச வேலை வாய்ப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே.

எதுவாயினும் தமிழ் மாணவர்கள் சிங்களப் பாடசாலைகளில் இணைந்து சிங்கள மொழியில் கல்வியைத் தொடர்வதானது, தமிழினத்தின் இருப்பிற்கும், அடையாளத்திற்கும் ஆரோக்கியமானதல்ல என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

அதேநேரம் சிங்களப் பாடசாலைகளில் இருக்கக்கூடிய வளங்களும் முகாமைத்துவச் சிறப்புகளும் தமிழ்ப் பாடசாலைகளின் வறுமை நிலையும் மலையகத் தமிழ் மாணவர்களின் கற்றல் மொழி, பாடசாலை என்பவற்றின் தெரிவை தீர்மானிக்குமாயின், சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே செல்லும் என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

நமுணுகுள சிங்கள வித்தியாலயத்தின் ஒவ்வொரு வகுப்பறைகளும் காட்சிப்படுத்தலில் வெற்றிவாகை சூடி நின்றன.

தரம் ஒன்று மாணவர்களைப் பார்வையிடச் சென்றோம். அவர்கள் பாடசாலையால் வழங்கப்பட்ட ரொட்டியைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் மதிய உணவு வழங்கப்படுவதுபோல, அங்கு மகிந்த சிந்தனையின் கீழ் காலை உணவு வழங்கப்படுகின்றது.

காலையில் சாப்பாட்டை கொடுத்து விட்டு கல்வியை வழங்குவது பொருத்தமானது போல தெரிந்தது.

அந்தந்த வகுப்பாசிரியர்கள் கூடவே நின்று, மாணவர்களுக்கு ரொட்டிகளை பரிமாறுகின்றனர். அந்த வகுப்பறையில் சிறிய தட்டொன்று வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவர்களும் தாம் சாப்பிடும் ரொட்டியில் ஒரு துண்டை அந்தத் தட்டில் வைப்பார்கள்.

இருபது மாணவர்கள் சாப்பிடுகின்ற போது இருபது ரொட்டித்துண்டுகள் அந்தத் தட்டில் இருக்கும். இது எதற்காகவென்றா கேட்கீறீர்கள்.


அதிபர்கள் கூட்டாக....

பறவைகளுக்குக் கொடுப்பதற்காகத்தான் இது. மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களில் ஜீவகாருண்யத்தை ஊட்டி வளர்க்கவே இத் திட்டம்.

ஜீவகாருண்யத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டால், கருணையோடு நோக்கும் இயல்பு மனிதர்களிடம் உருவாகிவிடும். அதன்பின் உயிர்களுக்கு உபாதை செய்யும் கொடுமை இல்லாது போகும். இந்த அடிப்படையில் நடக்கும் ஜீவகாருண்யத் திட்டம் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து கொள்ள.... நாங்கள் எப்படி? இந்தக் கேள்விகள் எங்கள் உள்ளங்களுக்கு கனத்தைத் தர அடுத்த வகுப்பறைகளுக்கு செல்லலானோம்.


காலைச்சாப்பாட்டை பரிமாறும் மாணவர்கள்...

(வளரும்)

விதுரன்

# கிளிநொச்சியில் மீள் குடியேற்றப்பட்ட 12 கிராமங்களுக்கு மின் விநியோகம்

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற் றப்பட்டுள்ள 12 கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது. நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு சென் றிருந்த மின்சார சபையின் வடக்கின் வசந் தம் திட்டத்தின் மின் அத்தியட்சர் எஸ். குகராஜ் தலைமையிலான குழுவினர் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மத்திய கல் லூரி புனரமைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# இலங்கையில் இறக்குமதி வரிக்குறைப்பினால் வாகனங்களின் விலைகள் குறைவடையும்

(கொழும்பு)

இலங்கையில் வாகன இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் வாகனங்கள் விலைகளில் குறைப்புகள் ஏற்படுத்தப்படும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் வாகன இறக்குமதி நிறுவனங்களை தொடர்பு கொண்டபோது அதன் நிர்வாகிகள் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

டொயோட்டா லங்கா நிறுவனம் தமது இறக்குமதி வாகனங்களின் விலைகள் குறையும் என தெரிவித்துள்ளது.

எனினும் அதன் விப ரங்களை உடனடியாக கணக்கிடமுடியாது என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜப்பான் வாகனங்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால் விலைகள் குறைவதற்கான வாய்ப்புகள் இல்லை என தம்மிக்க மோட்டார்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இறக்குமதி தீர்வை தள்ளுபடி, பேரூந்து பாரஊர்தி மற்றும் கனரக வாகனங்களின் விலைகளில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஏ.எம்.டபிள்யூ நிறுவனத்தின் தகவல்படி மாருதி சிற்றூர்தி 3 இலட்சத்தாலும் அல்டோ சிற்றூர்தி 8 இலட்சம் ரூபாய்களினாலும் குறையும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

டேவிட்பீரிஸ் நிறுவனம் முச்சக்கர வண்டிகளின் விலைகள் குறைவது தொடர்பாக தற்போது எதுவும் கூறமுடியாது என தெரிவித்துள்ளது. (6)

# வடக்கில் குடிநீர் மற்றும் கால்வாய் திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

வட பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சனை மற்றும் விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனம் போதியளவில் இல்லாமை போன்றவற்றுக்கு தீர்வு காணும் வகையில் அமைக்கப்படவிருக்கும் பாரிய உத்தேச கால்வாய் திட்டத்திற்கு நிதியுதவி வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி நெவ்கோ இஷிக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

வட பகுதி மக்களின் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான நீர்த் தேவையை நிவர்த்திக்கவென வடக்குக்கான பாரிய கால்வாய் அபிவிருத்தி திட்டமொன்றை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வவுனிக்குளம் நீர்த்தேக்கத்திற்கு இக்கால்வாய் ஊடாக நீர்கொண்டு செல்லப்படவிருக்கின்றது. இந்த அபிவிருத்தி திட்டம் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவிருக்கின்றது.

இந்த அடிப்படையில் கால்வாயை அமைப்பதற்கு தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள உலக வங்கி இக்கால்வாய் அமைப்புக்கான சாத்தியக் கூற்று அறிக்கையைத் தயாரிக்கத் தேவையான நிதியுதவி வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது. (6)

# புத்தளத்தில் இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைது

புத்தளம் பிரதேசத்தில் தமிழ் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகமை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி இருவரும் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்துமாறும் அதுவரையில் தடுப்புக்காவலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (6)


**ஆயுள்வேத திணைக்களத்தினால் கைதடி அரசினர் சித்தபோதனா வைத்தியசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் பற்றிய அறிவித்தல்**

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆயுள்வேத திணைக்களத்தினால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தாதிகள் (ஆண்/ பெண்)
   அரசவைத்தியசாலைகளில் தாதியாகப் பணியாற்றிய அனுபவமுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்கள்.

2. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
   அரசவைத்தியசாலைகளில் குறிப்பிட்ட பதவியில் 05 வருடம் சேவையாற்றிய அனுபவமுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்கள்.

ஆட்சேர்ப்பு நியதிகள்.

1. விண்ணப்பதாரி 65 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்
2. நேர்முகப்பரீட்சை மூலம் தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.
3. சம்பளம்,பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கான கொடுப்பனவிற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை கைதடி அரசினர் சித்தபோதனா வைத்தியசாலையில் பெற்று 30.06.2010 க்கு முன்னர் ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதத் திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலை யில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

ஆயுள்வேதத்திணைக்களம்
பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன,மகரகம.

ஆர்.பீ.டபிள்யூ.குணவர்த்தன
ஆயுள்வேத ஆணையாளர்.

(சி/362)



கொமர்ஷல் வங்கியின்
பொற் கடன்
அடகுச் சேவை



அதிகூடிய முதல்
குறைந்த வட்டி

- தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி
- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- உயர்ந்த இரகசியத் தன்மை
- தங்க ஆபரணத்திற்கு பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி வீதம்

தற்போது தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் அடகுச் சேவை வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

OgilvyAction

COMMERCIAL BANK
www.combank.lk






51 ஆவது படைத் தலைமையகத்தால் யாழ்.நாக விகாரை சுற்றாடலை அண்டிய பகுதிகளில் நேற்று சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் யாழ்.நகர படைவீரர்கள் சிரமதானப் பணியில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## கரப்பந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் பிரதேச செயலக அணிகள் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-24)

## 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3மணிக்கு அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளதுடன், நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் இரண்டாவது சுற்றுப் போட்டியில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (6-3-24)

## தொழிற்சங்க போராளிகள் தினம்

யாழ்.சர்வதேச மார்க்கசியக் குழுவினால் நடத்தப்படும் தொழிற்சங்க போராளிகள் கந்தசாமி, சோமபாலா தினம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் முன்பாகவுள்ள யாழ்.உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் தொழிற்சங்கத்தை சார்ந்தவர்கள் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-4)

# யாழ். மாவட்டத்தில் மேலும் 4 கிராம அலுவலர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புதிய நியமனங்களைப் பெறவுள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இப் பயிற்சி நெறிக்கு மேலும் 4 பயிலுநர்கள் அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான கடிதங்கள் அவர்களது தனிப்பட்ட விலாசங்களுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலரினால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் இவர்களை உடனடியாக மாவட்டச் செயலகத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெறவுள்ளோரின் பெயர் விபரம் வருமாறு,

யூ.காயத்திரி -(சுதுமலை மத்தி, மானிப்பாய்), ரி.துஷ்யந்தன் -(66/3, பழம் றோட் கந்தர்மடம்), ஏ.ரீ. சைலஜா- (வசாவிளான் கிழக்கு, ஒட்டகப்புலம்), எஸ்.இரத்தினகுமாரி - (சங்கானை வடக்கு, பிரான்பற்று பண்டத்தரிப்பு). (6)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகு நடத்தும் மாற்றுத் திறனுடையோருக்கான வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அரங்கில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலக விசேட கல்வி அலகின் தலைவர் நி. முருகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், கடவுளின் குழந்தைகள் நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் பி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## திருநாள் திருப்பலி

(குருநகர்)

குருநகர் வேளாங்கண்ணி அன்னை ஆலயப் பெருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

நவநாள் ஆயத்த தினத்தில் குணமாக்கல் வழிபாடு, நற்கருணை ஆராதனை, பக்தி வழிபாடுகளைத் தொடர்ந்து திருநாட் திருப்பலி அன்றைய தினம் மாலை 5 மணிக்கு அருட்திரு அன்ரனி வின்சன் சில்வேஸ்ரரால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (4-39)

## மாலதி முன்பள்ளியின் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 6 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் டாக்டர் லயன் வி.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் திருமதி சந்திரவதனா கெங்காதரன், கொக்குவில் ஸ்தான சி.சி.ரி.எம். பாடசாலை அதிபர் திருமதி யோ. திரவியநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் வை.தயாமோகன், வடமாகாண கல்வி அமைச்சின் இணைப்பாளர் க.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)




### 10 வருடங்களுக்கு மேலாக

# தகரக் கொட்டகையில் இயங்கி வரும் மாலுசந்தி பஸ் நிலையம்

## சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கரவெட்டி)

மாலுசந்தி பஸ் நிலையம் 10 வருடங்களுக்கு மேலாக தகரக் கொட்டகையில் இயங்கி வருவதாகவும் இதனால் இவ் பஸ் நிலையத்திலிருந்து வெளியிடங்களுக்கு செல்லும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பஸ் நிலையத்தில் பயணிகளுக்கான இருக்கைகள் இன்மையால் முதியவர்கள், சிறுவர்கள், மாணவர்கள் உட்பட பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடத்திலிருந்து தினமும் பல நூற்றுக்கணக்கான பயணிகள் கொடிகாமம், யாழ்ப்பாணம் மற்றும் பிற இடங்களுக்கு பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பிற இடங்களிலிருந்து வரும் வடமராட்சி மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பஸ் நிலையம் சீரின்மையால் அருகிலுள்ள கடைத் தொகுதிகளிலிருந்து பயணிப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டோர் இதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டு சுமுகமான பயணத்திற்கு வழிவகுக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-24)

# யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக ஜேர்மன் விழா நடத்தப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாட்டு கலை, கலாசாரத்தை பிரதிபடுத்தும் ஜேர்மன் விழா யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக ஜேர்மன் தூதுவராலயத்தால் நடத்தப்படவுள்ளது.

இவ்விழா எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாண பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஏனைய நிகழ்வுகள் 15ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

15 ஆம்திகதி மாலை 5 மணிக்கு திரைப்பட நிகழ்வு இடம்பெறவுள்ளது. இது தமிழில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

16,17 ஆம் திகதிகளில் ஜேர்மன் நாட்டில் தயாரிக்கப்பட்ட படங்களில் சிறந்த திரைப்படங்கள் யாழ்.மக்களுக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளன.

16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஜேர்மன் கல்வி முறை பற்றி ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஸ்ரைனர் என்பவரால் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

18 ஆம்திகதி ஜேர்மனுக்கும் சேர்பியாவிற்கும் இடையே இடம்பெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டி யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக 6 மீற்றர் நீளமான திரையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஜேர்மன் தூதுவராலய முதன்மைச் செயலாளர் கூட்டியோ வாமனன் தெரிவிக்கையில், எதிர்வரும் காலங்களில் ஜேர்மன் கலைஞர்களை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து அவர்களின் கலைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிவித்தார். (6-7)

# அம்பன் மத்திய மருந்தகத்தை சொந்த இடத்தில் இயங்கவைக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்தை அதன் சொந்த இடத்தில் இயங்க அனுமதிக்க வேண்டும் என வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அபிவிருத்தி அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் இவ் வைத்தியசாலையை தாண்டி நாகர் கோவில் பகுதி வரை பூசை வழிபாடுகளிற்கென மக்கள் சென்று வருகின்றனர். இந்த நிலையில் இவ் வைத்தியசாலையை இயக்குவதில் பிரச்சினைகள் இருக்காது எனவும் இவ் வைத்தியசாலையை சொந்த இடத்தில் இயக்கினால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நன்மை அடைவர் எனவும் இவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (6-43)

## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஐக்கிய தொழிலாளர் ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தொழிலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவினால் உயர்த்துவதாக தேர்தல் காலத்தில் ஆளும் கட்சி அளித்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளது. தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் தொழிற் சங்க நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் சம்பள உயர்வு தொடர்பில் இதுவரையில் கருத்து வெளியிடாத காரணத்தினால் சுவரொட்டிப் பிரசாரம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

எவ்வாறான தொழிற்சங்க போராட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தொழிற்சங்க ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (6)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6முதல் 13 வரை சங்கீதம், நாடகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு குறித்த பாட ஆசிரியர்கள் பாடத்திட்டம் , ஆசிரியர் கைந்நூல், எழுது பொருட்கள், பாடநூல் என்பவற்றை கொண்டு வருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (4-7)

## கட்சி மறுசீரமைப்பு குறித்து மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு

### ஐ.தே.க வட்டாரத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கட்சித் தலைமை மற்றும் பிரதித் தலைவர் தெரிவு போன்ற விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

தேர்தலின் மூலம் கட்சித் தலைமைப் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பினரும் தேர்தல் நடத்தப்பட வேண்டியஅவசியமில்லை என மற்றொரு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கட்சி மறுசீரமைப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற சந்திப்பின் போது மாகாகணசபை உறுப்பினர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

வாக்களிப்பின் மூலம் கட்சியின் முக்கிய பொறுப்புக்களை நிர்ணயிப்பதனால் உறுப்பினர்களுக்கிடையில் அதிகளவு பிளவு ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமைப் பொறுப்பில் தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்க நீடிக்க வேண்டுமென பல உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கப்பட வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (6)

## மின் பாவனையாளர்களின் முறைப்பாட்டை தெரிவிக்க தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

### மின்சக்தி எரி சக்தி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் மின்சார விநியோகத்தை சீராக மேற்கொள்வதற்கும் பாவனையாளர்களின் வசதி கருதியும் மூன்று அவசர தொலைபேசி இலக்கங்களை மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய மின்பாவனையாளர்களின் முறைப்பாடுகளை துரிதமாக முன் வைக்கவும் அதற்கு உடனடித்தீர்வு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் படி மின்சாரம் தடைப்படல் மற்றும் முறைப்பாடுகளை மின்சார சபையின் 1987 என்ற இலக்கத்துடனோ இலங்கை மின் கம்பனியின் 1910 என்ற இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு முறையிடலாம்.

இது தவிர மின்சார சபை அல்லது மின்சக்தி எரிசக்தி அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகள், மோசடிகள் மற்றும் முறைப்பாடுகளை மின்சக்தி எரிசக்தி அமைச்சின் அவசர அழைப்பு இலக்கமான 1901 இற்கு தொடர்பு கொண்டு நேரடியாக தெரிவிக்க முடியும். (6)

## அரசியல்சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஆளும் கட்சி தலைவர்களுக்கு இடையில் முரண்பாடு

(கொழும்பு)

அரசியல் சாசனத் திருத்த யோசனைத் திட்டம் தொடர்பில் ஆளும் கட்சி தலைவர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சித் தலைவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளினது தலைவர்கள் தங்களது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்குமாறு இடதுசாரி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சித்தலைவர்களின் கருத்துக்களை ஜனாதிபதி உன்னிப்பாக அவதானித்ததாக தெரிவிக்கப்படுகிறது. முதல் கட்டப் பேச்சு வார்த்தைகளில் எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6)


## 03.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- *1539* - ஸ்பானிய நாடுகாண் பயணி ஹெர்னாண்டோ டெ சோட்டோ புளோரிடாவை ஸ்பெயினுக்காக உரிமை கொண்டாடினான்.
- *1864* - அமெரிக்க உள்நாட்டுப் போர் கூட்டணிப் படைகள் வேர்ஜீனியாவின் ஹனோவா நகரில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளைத் தாக்கினர்.
- *1940* - இரண்டாம் உலகப் போர் ஜெர்மனியின் வான்படை பாரிஸ் நகரில் குண்டுகளை வீசின.
- *1940* - இரண்டாம் உலகப் போர் பிரான்சின் டன்கேர்க் நகரில் இடம் பெற்ற போடரில் ஜெர்மன் படைகள் வெற்றி பெற்றன. நட்பு அணி நாடுகள் முழுமையாகப் பின்வாங்கின.
- *1962* - பிரான்சின் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- *1965* - நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்களில் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.
- *1969* - தெற்கு வியட்நாமில் மெல்பேர் ன் என்ற அவுஸ்திரேலிய போர்க்கப்பல் எவான்ஸ் என்ற அமெரிக்கப் போர்க்கப்பலுடன் மோதி அதை இரண்டாகப் பிளந்தது.
- *1984* - அம்ரித்சரில் சீக்கியர்களின் புனிதப் பொற்கோயிலுள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர்.
- *1991* - ஜப்பானில் உன்சென் மலை வெடித்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஆவார்.
- *1998* - ஜெர்மனியில் கடுகதி தொடருந்து ஒன்று பாதையை விட்டு விலகியதில் 101 பேர் கொல்லப்பட்டனர்.
- *2006* - 2001 இல் அகற்றப்பட்ட கண்ணகி சிலையை தமிழக முதல்வர் மு.கருணாநிதி மீண்டும் திறந்து வைத்தார்.
- *2006* - மொண்டெனேகுரோ நாடு செர்பியா - மொண்டெனேகுரோ கூட்டமைப்பில் இருந்து பிரிந்தது.
- *2007* - கொழும்பில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- *2007* - தெற்கு சீனாவில் யுனான் பகுதியில் இடம்பெற்ற 6.4 அளவு நில நடுக்கத்தில் பலர் கொல்லப்பட்டுப் பலத்த சேதம் ஏற்பட்டது.

**1924 தமிழக முதல்வர் (திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ) முத்துவேல் கருணாநிதி பிறந்தார்.**



## தொல்லியல் திணைக்கள உயரதிகாரிகள் குழுவினர் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

தொல்லியல் திணைக்கள உயர் அதிகாரிகள் குழு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவில் தொல்லியல் திணைக்களப பணிப்பாளர் கலாநிதி செனவிரத்தின திசாநாயக்க தலைமையில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் கலாசார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்குழுவினர் யாழ். மாவட்டத்தில் இருக்கும் தொல்லியல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன் நாளை வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி யாழ் அரச அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இவர்கள் யாழ்ப்பாணம் கோட்டையில் நடைபெறும் தொல்லியல் தொடர்பான ஆராய்ச்சிகளையும் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## தேசிய சுதந்திர முன்னணியின் சின்னத்தை மாற்ற தீர்மானம்

(கொழும்பு)

நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுச் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அதன் கிரீடம் சின்னத்தை மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளது.

முன்னணியின் தலைவர் தலைமையில் அடுத்த வாரம் கூட விருக்கின்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் கட்சியின் சின்னத்தை மாற்றுவது தொடர்பில் இறுதி தீர்மானம் எட்டப்படும்.

அரசியல் கட்சிகளை பதிவு செய்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்ற நிலையிலேயே தேசிய சுதந்திர முன்னணி மேற்கண்ட தீர்மானத்தை எட்டியிருப்பதாகவும் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்திற்கு விரைவில் கொண்டுவர விருப்பதாகவும் முன்னணி அறிவித்துள்ளது.

கிரீடம், இரட்டை வாள் உள்ளிட்ட தேசிய ரீதியில் மதிப்பு கொடுக்க வேண்டிய இன்னும் சில இலட்சினைகளை தேர்தல்கள் திணைக்களம் கட்சியின் சின்னமாக வழங்காமல் விடுவதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

## வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது

(வேலணை)

மண்கும்பான் பகுதியில் தீவகத்தின் பிரதான வீதியையும் அல்லைப்பிட்டி மண்குப்பான் பிரதான வீதியையும் இணைக்கும் உள்ளூர் வயல் வெளி வீதி (4ஆம் கட்டையடி) ஊரிமண் மூலம் உயர்த்தப்பட்டு புனரமைப்பு செய்யப்படுகின்றது.

இதனால் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு இலகுவாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வீதியானது வேலணை பிரதேச சபைக்கு சொந்தமானது ஆகும் (6-22)

## பனை வளத்தில் தங்கியுள்ளோரின் வாழ்க்கை மேம்படுத்தப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை சகல வசதிகளுடனும் மீண்டும் இயங்கச் செய்து, வலிகாமம், வரணி மற்றும் திக்கத்தில் அமைந்துள்ள வடிசாலைகளை தரம் உயர்த்துவது, வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களான மன்னார் , கிளிநொச்சி, முல்லைத்தீவில் வடிசாலைகளை அமைத்தல், போத்தலில் கள் அடைப்பதற்கு பன்னிரண்டு நிலையங்களைத் தெரிவு செய்து உற்பத்தியை மேற்கொள்ளுதல், பனம் பொருள் உற்பத்திகளுக்குரிய சந்தை வாய்ப்பினைக்கண்டறிந்து அதனை மேம்படுத்துவது ஆகிய முக்கிய விடயங்களை முன்னெடுப்பது போன்ற திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரவித்தார்.

அண்மையில் வடபிராந்திய பனை, தென்னை வள கூட்டுறவாளர் சமாச நிர்வாக பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பனம்பொருள் உற்பத்தி வல்லுநர்களுக்கு உரிய தொழில்பயிற்சிகளை வழங்குதல், நவீன முறையில் கள் இறக்கும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் , மாதிரி பண்ணைகளை புதிதாக அமைப்பதுடன் பனம்-வெல்லம், பனங்கட்டி, பனந்தும்பு ஆகிய உற்பத்திகளை பெருக்குவது என்பவற்றுடன் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் புதிதாக வினாகிரி உற்பத்திகளை ஆரம்பித்தல் ஆகிய வேலைத்திட்டங்களையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதிபடத்தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார், வடபிராந்திய மதுவரித்திணைக் கள அத்தியட்சகர் கிறிஸ்டி, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன் ஆகியோரும் உடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



## மினிபஸ் தரிப்பிடம் புதிய இடத்துக்கு

(வேலணை)

யாழ். நகரில் இதுவரையும் வைரவர் கோவில் வீதியில் (அரச பேருந்து தரிப்பிடத்தின் மேற்குப் பகுதியில்) இது வரையும் மினிபஸ் தரிப்பிடமாக விளங்கிய இடம் தற்போது மின்சார நிலைய வீதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து ஓட்டுநர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி கொடிகாமம்,ஊர்காவற்றுறை, கச்சேரி போன்ற வழித்தடங்கல் பஸ்கள் இப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (6-22)

## தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீ காந்தா தலைமையிலான தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் செயலாளருமான கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் இதற்கான ஆவணங்களை தேர்தல் ஆணையாளரிடம் தாம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவார்களா என வினவியபோது,

தாம் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இது குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக கே. சிவாஜிலிங்கம் பதிலளித்தார். (6)

## கேரதீவு கடற்பாலம் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடைப்பட்ட கடல் மீது அமைக்கப்பட விருந்த கடற்பாலத்தின் ஆரம்ப கட்ட பணிகள் மே மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

புனர் நிர்மாணப்பணிக்கான பொருட்கள் தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. எனவும் இப்பாலத்தின் பணிகள் சுமார் 6 தொடக்கம் 8 மாதத்தினுள் முடிவு பெறுமென தாம் நம்புவதாகவும் தகவல் தந்த அதிகாரி கூறினார்.

இப்பாலத்தின் நிர்மாண பணி முடிவுற்றால் இவ்வீதியூடாக வன்னி பெரு நிலப் பரப்புக்கு செல்வோர் சிரமமின்றியும் குறுகிய நேரத்திற்குள் சென்று வரமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (6-22)

## மலேஷியாவில் உள்ள தமிழ் அகதிகளுக்கு நோர்வே, கனடா நாடுகளில் புகலிடம்?

மலேஷியாவில் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நோர்வே, கனடா ஆகிய நாடுகளில் அரசியல் புகலிடம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று வியாழக்கிழமை இதற்கான முடிவு அறிவிக்கப்படும் என இந்திய இணையதள செய்திகள் கூறுகின்றன.

அதுவரை 75 இலங்கை தமிழர்களும் அகதிகள் அந்தஸ்துடன் மலேஷியாவில் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. (6)

## உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்த திட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பெண்கள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதம் வரையிலேனும் உயர்த்துவதற்கு முக்கிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவருவதாக குறிப்பிடுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பு மனுக்களில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படக் கூடிய வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஏ.எல்.எம்.அதா வுல்லாவை வலியுறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் 40 வீத இளைஞர் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6)

## இந்திய நடிகர்,நடிகையரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு

(கொழும்பு)

சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் பங்கு பற்றவுள்ள இந்திய நடிகர், நடிகையரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு மேலதிகமாக விசேட பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்திய நடிகர்கள், நடிகைகள் பிரபுக்கள் தங்கும் ஹோட்டல்கள் பண்டரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் எஸ்.எஸ். சீ விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் பாதுகாப்புப் பணிகளில் அமைச்சுப் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் விசேட அதிதிகள் பயணம் செய்யும் ரயில் பாதையின் பாதுகாப்பு கடமைகள் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (6)

## அரச வாகனங்களுக்கு விசேட வர்ணங்களை பூசுவதற்கு நடவடிக்கை

அரசாங்க வாகனங்களை இலகுவாக அடையாளம் காண்பதற்காக அந்த வாகனங்களுக்கு விசேடமான வர்ணங்களை பூசுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மோட்டார் போக்குவரத்து திணைக் கள ஆணையாளருக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். அரச வாகனங்கள் முறைகேடாக பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்கள்:- ரி.மன்மதகாந்தன்- ரி.திலீப்குமார்
(கொழும்பு)

## மாதிரி பரீட்சை–05
## வினாத்தாள் –II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து(1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அப்போது அகிலாவுக்கு ஆறு வயது இருக்கும். ஒரு நாள் அவளுடைய அப்பா ஒரு சிறு தகரப்பெட்டி ஒன்றை வாங்கி வந்தார். பல வர்ணங்களில் சித்திர வேலைப்பாடு செய்திருந்த அந்தப் பெட்டியின் முகப்பில் ஒரு கண்ணாடி பதித்திருந்தது. அந்த தகரப் பெட்டி அகிலாவின் குழந்தை உள்ளத்தை வெகுவாக கவர்ந்தது. அதில் மயங்கிப்போன அகிலா அந்தப் பெட்டியை மேலும் கீழுமாக பல தடவை புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். அப்பொழுதுதான் அதில் பதித்திருந்த கண்ணாடியைக் கண்டாள். கண்ணாடியில் அவளது முகம் பூரணமதிபோல பிரகாசமாகத் தெரிந்தது. பளபளவென இருந்த அந்தத் தகரப் பெட்டியை எடுத்துக் கொண்டு தனது தாயிடம் ஓடினாள்....

1. கண்ணாடியில் தோன்றிய முகத்தின் உருவத்தை எவ்வாறு அழைப்பர்?
...........................................................................................
2. இப்பந்தியில் உள்ள காலப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
...........................................................................................
3. இப்பந்தியில் உள்ள பெயரெச்சம் ஒன்றைத் தருக?
...........................................................................................
4. இப்பந்தியில் உள்ள வினையெச்சம் ஒன்றைத் தருக.
...........................................................................................
5. இங்கு இடம் பெற்றுள்ள இணைமொழி எது?
...........................................................................................
6. இங்கு காணப்படும் உவமானம் ஒன்றினை எழுதுக.
...........................................................................................
7. பூரணமதி தோன்றும் நாளை எவ்வாறு அழைப்பர்?
...........................................................................................
8. இப்பந்தியில் இடம் பெற்றுள்ள உயர்திணை, படர்க்கை, ஆண்பால் ,பெயர்ச்சொல் ஒன்று தருக.
...........................................................................................
9. பின்வரும் வாக்கியத்தில் உள்ள பெயரடைச்சொற்களின் கீழ்க் கோடிடுக. அந்தத் தகரப்பெட்டி அவளது உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது.

10. இப்பந்தியில் உள்ள இரட்டைக்கிளவி ஒன்று தருக?
...........................................................................................

02. பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

1. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு
...........................................................................................

2.சீட்டுக் கொடுத்தல்
...........................................................................................

03. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியீடுகளை இடுக.

1. நற்றமிழ்ப் புலவரே தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுன மடா
2.ஆறு குளம் ஏரி கிணறு இவை யாவும் நீர்நிலைகளாகும்

04.பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1.முனிவர்கள் வாழும் இடம் ......................
(அந்தப்புரம்/ கோயில்/பன்னசாலை)
2. எழுபத்தைந்து ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா
(பொன்விழா/ வைரவிழா/ பவளவிழா)

05. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனம் அமைக்குக.

1. மகாவித்தியாலயம்/ கல்வி/ பாரதி/ விளங்கியது/சிறந்து.
...........................................................................................
2. குறைவு/ கொம்பு/ தொகை/ மான்களின்/மிகவும்/உள்ள
...........................................................................................

06. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.

1.

He is ........................ the cloths
(bathing/watering/washing/drinking)

2.உருவில் உள்ள நாயின் உறுப்புக்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைத் தருக.


I. ..........................

II. ..........................

07. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1. தயவு செய்து இங்கே வாருங்கள்..................................................

✸ 8ஆம் 9ஆம் வினாக்களில் உள்ள சிங்களச் சொல்லின் தமிழ் கருத்தை எழுதுக.


08.
09.



10.

உருவில் உள்ள பறவையின் பெயரை சிங்களத்தில் எழுதுக. (..........................................................)

✸ 11 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

11. மிகத் தொலைவில் இருக்கும் இரையையும் தொலைவில் இருந்தே இனங்காணக்கூடிய கூர்மையான பார்வையுடைய பிராணி
1. காகம் 2.கழுகு 3.கோழி 4.வௌவால்

12. உருவில் உள்ள பறவை

1. வான்கோழி 2.காட்டுக்கோழி
3.கானாங்கோழி 4.நெருப்புக்கோழி

13.பொரித்து உண்ணும் வடகம் தயாரிக்கப் பயன்படும் பூ
1.வேப்பம்பூ 2.இலுப்பம் பூ 3.தாமரைப்பூ 4. முருக்கம் பூ

14.வெயிலில் காயவைத்து பேணப்படும் உணவுப் பொருளான பினாட்டு பெறப்படும் பழம்
1.வில்வம்பழம் 2. விளாம்பழம் 3.பனம்பழம் 4. இலுப்பம்பழம்

15.

உருவில் உள்ள வித்துப் பரம்பலடைவது
1. விலங்குகளால் 2.நீரால்
3.காற்றால் 4. அதிர்ந்து வெடித்து

16. கார்த்திகை உடுத்தொகுதியில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை
1. நான்கு 2.ஐந்து 3.ஆறு 4.எட்டு

17.இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான தரச்சான்று.


(1) (2) (3) (4)

18. கொதித்தாறிய நீரைப் பருகுவதால் தவிர்க்கக்கூடிய நோய்
1. மலேரியா 2.கழிச்சல் நோய் 3. சலரோகம் 4. மரஸ்மஸ்

19. சூரிய வெப்பம் அதிகமாக உள்ள வேளைகளில் தொலைவில் நீர் இருப்பது போல தோன்றும் பொய்த் தோற்றம்
1. ஏரி 2. குளம் 3.நீர்வீழ்ச்சி 4.கானல் நீர்

20. எமது பாதுகாப்புத் தொடர்பான சரியான செயற்பாடு
1.மலையுச்சியிலிருந்து பள்ளத்தை நோக்கி கைப்பிடியை பிடிக்காது சைக்கிள் ஓட்டிச் செல்லுதல்
2.இங்கே குளிப்பது ஆபத்தானது என அறிவித்தல் பலகை காணப்படும் ஒரு குளத்தில் இறங்கி குளிக்க முற்படுதல்
3.பாரிய மரமொன்றின் உச்சி கிளையைத் தறிக்கப்படுவதை அருகே இருந்து பார்த்துக் கொண்டிருத்தல்
4. பாதசாரிகள் வீதியின் வலப்பக்கத்தால் நடந்து செல்லல்

21. நான் வீட்டிலும் பாடசாலையிலும் பொறுப்புடன் வேலை செய்யும் ஒரு சிறு பிள்ளை யாவேன் என்பது
1.மலர்வு 2. பிரார்த்தனை 3. மனவுறுதி 4. மனதைதளர்த்துதல்

✸ தரப்பட்ட இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி 22ஆம் 23ஆம் வினாக்களிற்கு விடை தருக.




22.
இந்து சமுத்திரத்தின் நடுவினிலே
இலங்கும் தீவாம் இலங்கை இது
தந்த செல்வமே களனிநதி
தரணி போற்றும் கல்யாணி

இப்பாடலில் குறிப்பிடப்படும் நதியைக் குறிக்கும் எழுத்து எது?
1.W 2. X 3. Y 4.Z


23.
தேநீர் போல உழைக்கும் மக்கள்
சேர்ந்து வாழும் நகரம்
ஞானி யோகர் சுவாமி நல்லூர்
நாவலர் போற்றும் நகரம்

இப்பாடலில் குறிப்பிடப்படும் நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1.A 2. B 3. C 4.D

24. ஒருவர் சிவப்பு,மஞ்சள், நீலம் ஆகிய நிறச் சாயங்களை வைத்திருந்தார் ஆனால்

25. போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு நடைபெறும் மாதம்
1. தை 2 மாசி 3 சித்திரை 4. ஆடி

26.மடிப்புக்குலையாதிருக்க தைக்கப்படும் தையல்




27. 
இக் குறியீட்டினால் கருதப்படுவது
1. வீதி செப்பனிடும் வேலை நடைபெறுகின்றது
2.முன்னாள் சாய்வான பாதை
3.முன்னால் கற்பாறைகள் விழும்
4.குண்டும் குழியுமான வீதி

28. அனுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தின் கிளையை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவந்தவர்
1. பராக்கிரமபாகு 2. தாதுசேனன் 3.விஜயன் 4. சங்கமித்தை


29.தூண்டிலின் மூலம் மீன் பிடிக்கும் போது தூண்டிலில் கொழுவப்படும் இரை.
1.நாக்கிளிப்புழு 2. பயற்றங்காய் 3.சோளம் 4.கரட்

30.சைக்கிள் மிதியுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லின் பற்களின் எண்ணிக்கை
1.18 2. 22 3. 44 4. 60


31. *பொலி பொலி தாயே பொலி தம்பிரானே பொலி* என்னும் பாடல்
1. அரிவு வெட்டும் பாடல் 2. சூடு மதிப்புப் பாடல்
3.கும்பிப் பாட்டு 4.கோலாட்டம்

32. கிராமப்புற வியாபாரிகள் வாழைப்பழத்தை விரைவாகப் பழுக்கச் செய்யும் முறை
1. புகையூட்டல் 2. நீர் தெளித்தல்
3. மணலில் புதைத்தல் 4. உப்புக் கரைசல் தெளித்தல்

33. உடலுக்கு சக்தியைத் தரும் போசாக்கு பதார்த்தங்கள்
1. காபோவைதரற்று,கொழுப்பு 2. புரதம் ,இரும்பு
3.விற்றமின், கனியுப்புக்கள் 4. புரதம், நீர்


34. 

இவ் அசையும் வண்ணத்துப் பூச்சியின் தலையிடு (A) எனக் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருக்கக்கூடிய பொருள்
1.ஈர்க்கு 2. குண்டூசி 3.நூல் 4.பிசின்

35. 
இவ் இலட்சணையினால் குறிப்பிடப்படும் அரச நிறுவனம் எது?
1. இலங்கை போக்குவரத்து சபை
2. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை
3. சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை
4. தேசிய பாதுகாப்புச் சபை

36. இராவணன் சீதையை இலங்கைக்கு கடத்திவர பயன்படுத்தியதாகக் கூறப்படும் போக்குவரத்து சாதனம்
1.குதிரை வண்டி 2.விமானம் 3. புட்பகவிமானம் 4. அன்னப்பறவை

✹ மரங்களில் இருந்து தளபாடங்கள் செய்யப் பயன்படுத்தும் சில உபகரணங்கள் கீழே காணப்படுகின்றன.




பின்வரும் பணிகள் செய்வதற்கு மிகவும் உகந்த கருவியின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக


37. பலகைகளில் சிறு துவாரம் இடுவதற்கு ..........

38.பனை, தென்னை மரங்களைப் பிளப்பதற்கு ..........

✹ பின்வரும் அடைப்பில் சில பூச்சிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன


| | | | |
|---|---|---|---|
| தும்பி | கரப்பான் பூச்சி | பிள்ளைப்பூச்சி | கும்பிடுபூச்சி |
| நுளம்பு | சிலந்தி | நீர்ப்பூச்சி | வெட்டுக்கிளி |

ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள பூச்சிகளின் பெயரை தெரிந்து எடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.




39) .......... 40) .......... .......... 42) ..........

43. மின் குமிழ் ஒன்று உலர்மின்கலம் இரண்டு, வயர்த்துண்டுகள் மூன்று தரப்பட்டு அதில் ஒரு வயர் ஒரு மின்குமிழுடனும் ஒரு உலர்மின்கலத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரு வயர்த்துண்டுகளையும் மின்குமிழ் ஒளிரத்தக்கவாறு இரு உலர் கலங்களுடன் சரியாக இணைக்குக.



✹ ஒரு கிராமத்தில் மரக்கறி பயிரிடுவோர் எண்ணிக்கை தொடர்பான நிரல் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.





44. கிராமத்தில் அதிகமானோர் பயிரிடும் பயிர் எது?
..........

45. கீரை வகைகளை பயிரிடுவோர் எத்தனை பேர்?
..........

46. இங்கு மரக்கறி பயிரிடுவோரின் மொத்த எண்ணிக்கை யாது?
..........

47. கிழங்கு வகை பயிரிடுவோரிலும் பார்க்க கீரைவகை பயிரிடுவோர் எத்தனை பேர் அதிகம்.
..........

48. 


வரிப்படத்தில் காணப்படும் இரு பென்சில்களின் நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் எவ்வளவு?
..........

49. 

A பாத்திரத்தில் இருந்து B பாத்திரத்தில் இரண்டு தடவை நீர் ஊற்றப்பட்டது. B பாத்திரம் நிரம்ப இன்னும் ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?
B ..........

50. எந்தவொரு தாள்க்காசையும் வெளிச்சத்தை நோக்கிப் பிடிக்கும் போது ஊடு தெரியும் பகுதியில் காணப்படும் உருவம் யாது? ..........

✹ பிரித்தானியாவிலிருந்து புறப்பட்ட விமானம் டுபாயில் சிறிது நேரம் தரித்து நின்று மீண்டும் புறப்பட்டு கொழும்பை வந்தடைந்தது.
விமானம் பயணித்த நேரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.


| பிரித்தானியா | டுபாய் | கொழும்பு | வேறு குறிப்பு |
|---|---|---|---|
| 11:25 | 17:40<br>18:10 | 22:55 | செல்லுகை -<br>வருகை - |


51. விமானம் பிரித்தானியாவில் இருந்து புறப்பட்டு டுபாயை வந்தடைய எடுத்த காலம் எவ்வளவு?
..........

52. விமானம் பிரித்தானியாவிலிருந்து கொழும்பை வந்தடைய எடுத்த காலம் எவ்வளவு?
..........

53. இனிப்பு ஒன்றின் விலை ரூபா 3.75 ஆகும். அவ்வாறான 4 இனிப்புக்களின் விலை யாது?
..........

54. கழிக்குக. $\frac{3}{4} - \frac{1}{3} =$ ..........

55. 
எட்டு மணிக்கு 20 நிமிடங்கள் என்பதை இக்கடிகார முகத்தில் முட்களை வரைந்து காட்டுக.

56. 

உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
..........


57. உருவில் நிழற்றப்படாத பகுதியின் சுற்றளவு யாது
..........

✹ பின்வரும் பந்தியை வாசிக்க

இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்து ஒரு குருவி தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்தது. ஆயினும் தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காணவில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கமும் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் ..........
..........

(இதனைப் பூரணப்படுத்தி ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும் இவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்).





இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கரவெட்டி சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்பட்ட கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட இறுதி சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட வதிரி பொம்மர்ஸ் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணிகள் விருந்தினர்களுக்கு அறிமுகம்செய்து வைக்கப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவிக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் கரவெட்டி தலைமை சமுர்த்தி முகாமையாளர் சு.சிவகுமார் இமையாணன் வி.க. தலைவிக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- செல்வதீபன்)

# அபராதம் செலுத்த முடியாத நிலையில் 8 ஆயிரம் பேர் சிறையில் முடக்கம் !

(கொழும்பு)

அபராதத் தொகையைச் செலுத்த முடியாத நிலையில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிறைச்சாலைகளில் இருப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். இந்த கைதிகள் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை விட அதிகளவான நிதியை அவர்களை பராமரிப்பதற்காக அரசாங்கம் செலவிட நேர்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கும் நடைமுறைக்கு பதிலாக சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு சமுகமளிக்கும் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை பிரச்சினைகள் குறித்து அறிவியல் ரீதியாக ஆராய்ந்த செயற்பாட்டு ரீதியான தீர்வுகளை வழங்கவேண்டும். வெலிக்கடை சிறைச்சாலை கொழும்பு நகர எல்லைக்குள் இருப்பதால் அதனை இடமாற்றம் செய்வதற்காக 100 ஏக்கர் நிலப்பரப்பை தேடி வருவதாகவும், ஐக்கிய நாடுகளின் தரத்திற்கு அமைய சிறைச்சாலையை அமைப்பதே இதன் நோக்கமாகும்.

அதேவேளை 10 ஆயிரம் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு தற்போது புனர்வாழ்வுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன எனவும் அமைச்சர் டியூ குணசேகர மேலும் கூறியுள்ளார். (ச-5)

# இந்தோனேஷிய விமான நிலையத்தில் இலங்கைப் பயணிகள் கடும் சோதனை

(கொழும்பு)

இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கைப் பயணிகள் கடும் சோதனைக்கும், விசாரணைக்கும் உட்படுத்தப்படுவதாக கொழும்பு இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜகார்த்தா விமான நிலையத்தில் இந்தோனேஷிய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் இலங்கை கடவுச்சீட்டுக்களை வைத்திருக்கும் பயணிகள் மாத்திரம் கடும் விசாரணைக்குட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வர்த்தகக் கண்காட்சியொன்றில் கலந்துகொள்வதற்காக 200 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்திருந்தது எனவும் சுமார் ஒரு மணிநேரம் விமான நிலையத்தில் இவர்கள் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பாக இந்தோனேஷிய அதிகாரிகளிடம் கேட்டபோது,

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்வதற்கு ஜகார்த்தாவை ஒரு தளமாகப் பயன்படுத்துகின்றனர் என அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

எனவேதான் தமிழ் அகதிகளுக்கு மாத்திரம் என்றில்லாமல் இலங்கையின் கடவுச்சீட்டு வைத்துள்ள அனைவரும் கடும் சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (6)

# அநுராதபுரத்தில், பொலிஸ் பரிசோதகரின் கடன் அட்டையை களவாடிய சார்ஜன்ட் கைது

(கொழும்பு)

அனுராதபுரப் பகுதியில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கடன் அட்டையை களவாடிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்குறித்த சார்ஜன்ட் தர அதிகாரி பெருந்தொகையான பணத்தை தானியங்கி இயந்திரங்களின் ஊடாக மோசடியான முறையில் பெற்றுள்ளார்.

அனுராதபுர குற்ற விசாரணைப் பிரிவினரால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் அதிகாரியின் வீட்டை பரிசோதனை செய்தபோது கற்களுக்கு அடியில் இரண்டு இலட்சத்து ஐயாயிரம் ரூபா பணத்தை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக மூன்று இலட்சத்திற்கும், அதிகமான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடன் அட்டை காணாமல் போனதனை அடுத்து வங்கியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், உரிய கணக்கில் பணம் பெற்றுக்கொண்டவரின் வீடியோக் காட்சிகளை பரிசோதனை செய்ததன் மூலம் குறித்த சார்ஜன்ட் தர பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6)

# அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



அபிவிருத்திக்குப் பெருந்தொகையான நிதி செலவிடப்படுகின்ற போதிலும் அதிலிருந்து முறையாக பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பதனால் அபிவிருத்தியும் அவற்றைப் பராமரிக்கின்ற பிரிவுகளும் முறையாக முன்னெடுக்கப்படல் வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியை மேம்படுத்தல் தொடர்பில் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அபிவிருத் திட்டங்களை முன்னெடுக்கின்ற போது புனித பூமியைப் பாதுகாப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மஹிந்த சிந்தனையின் மூலமாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனால் சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தொல்பொருட்கள் இருக்கின்ற மதிக்கக் கூடிய இடங்களில் சுமார் 20க்கு மேற்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றை முறையாக முன்னெடுக்க வேண்டும்.

போயா தினங்களில் பக்தர்கள் அனுராதபுரம் உள்ளிட்ட மதவழிபாடு ஸ்தலங்களுக்கு செல்லவிருக்கின்றமையினால் அந்த இடங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் கழிவுகளை அகற்றுவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

பராமரிப்பிற்காக பல்வேறுபட்ட அரச நிறுவனங்களை சேர்ந்தோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் குறித்து கவனம் செலுத்தவேண்டும். அதற்கு அப்பால் சிவில் பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (6)

## சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால்

# பெரும்பாலான இலங்கையர்கள் தொழில்வாய்ப்பை இழக்கும் அபாயம்

## இடதுசாரி முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுடன் "சீபா" ஒப்பந்தம் (பரந்தளவிலான பொருளாதார நல்லிணக்க ஒப்பந்தம்) கைச்சாத்திடப்பட்டால் பெரும்பாலான இலங்கையர்கள் தொழில்வாய்ப்புக்களை இழக்கவேண்டிய பயங்கரமான சூழ்நிலை உருவாகும் என்று இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் வளங்களை கொள்ளையடித்து இந்தியாவின் ஒரு மாநிலமாக மாற்றும் திட்டம் இன்று கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இந்தியாவிலிருந்து இங்கு வந்து தொழில் செய்வதற்கான கதவுகள் திறக்கப்படும். அத்தோடு எந்தப் பகுதியிலும் முதலீடுகளை செய்வதற்கான அங்கீகாரமும் கிடைக்கும். ஆனால் இலங்கையர்கள் இந்தியா சென்று தொழில் புரியவோ முதலீடு செய்யவோ முடியாது.

இவ்வாறான நிலைமை தோன்றினால் எம் நாட்டு தொழிலாளர்கள் தொழில்களை இழப்பதோடு எதிர்கால சந்ததியினருக்கும் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காமல் போகும். ஏனெனில் குறைந்த சம்பளத்திற்கு இந்தியர்கள் வேலை செய்வார்கள்.

இங்கு ஆரம்பிக்கும் பாரிய திட்டங்களிலும் இலங்கையர்கள் புறக்கணிக்கப்படுவார்கள்.

இந்தியாவிலிருந்தே ஊழியர்களைக் கொண்டு வருவார்கள். சீனா இங்கு பாரிய திட்டங்களை ஆரம்பித்தபோது எம் நாட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதாகத் தெரிவித்தனர். ஆனால் இன்று என்ன நடந்துள்ளது. சீன நாட்டவர்கள் 17 ஆயிரம் பேர் இங்கு தொழில் புரிகின்றனர். இவர்கள் அனைவரும் அந்நாட்டு சிறைக் கைதிகளாவர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சீபா ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே எதிர்ப்புக் காட்ட வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

எவ்வாறெனினும் ஜனாதிபதியை இந்தியாவிற்கு வரச் சொன்ன காரணம் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவே ஆகும். இன்று நாட்டில் பணமில்லை. எனவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது உறுதியாகும். (6)

# மசாஜ் நிலையங்கள் முற்றுகையிடப்படவுள்ளன

சட்டவிரோத ஆயுர்வேத மசாஜ் நிலையங்களை முற்றுகையிடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக ஆயுர்வேத திணைக்களம் தெரிவித்துள்ளது. பதிவுசெய்யப்படாத பல மசாஜ் நிலையங்கள் தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமாக இயங்கும் பல மசாஜ் நிலையங்கள் இருப்பதாகவும் அண்மையில் கண்டி பிரதேசத்தில் இயங்கி வந்த 15 நிலையங்களை முற்றுகையிட்டதாகவும் திணைக்களம் கூறியுள்ளது. (ச-5)


# ஜி போட்டோ ஸ்பேஸ்

கூகுள் தன் வாடிக்கையாளர்களுக்கு போட்டோக்களைப் பதிந்து வைத்திட இடம் தருவதிலும் தனக்கென ஒரு தனி வழியைக் கையாண்டு வருகிறது. ஜி போட்டோ ஸ்பேஸ் எனத் தனியே ஒரு வசதியினை இதற்கெனத் தருகிறது. பயர்பொக்ஸ் பயன்படுத்துபவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்த ஓர் அட் ஒன் தொகுப்பு தரப்பட்டுள்ளது.

போட்டோக்களை இணையத் தளத்தில் வைத்து பாதுகாப்பது இன்று பரவலாகப் பலரும் பயன்படுத்தும் ஒரு வசதியாக மாறி வருகிறது. பல இணையத் தளங்கள் போட்டி போட்டுக் கொண்டு இதற்கான வசதிகளைச் செய்து வருகின்றன. போட்டோக்களை அனைவரும் காணும் வகையிலோ அல்லது குறிப்பிட்ட சிலர் மட்டும் காணும் வகையிலோ பதிந்து வைக்கலாம்.

ஒவ்வொருவருக்கும் போட்டோக்களைப் பதிய தரப்படும் டிஸ்க் இடம், தளத்திற்கு தளம் மாறுபடுகிறது. ஜிமெயில் எக்கவுண்ட் உள்ளவர்கள் அனைவரும் கூகுள் தரும் ஜி போட்டோ ஸ்பேஸ் பகுதியினையும் பயன்படுத்தலாம்.

உங்களுக்கு போட்டோக்களை ஒன்லைனில் அனுப்புவதில் சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா? அப்லோட் செய்வதில் பெரிய அளவில் பிரச்சினைகளைச் சந்திக்கிறீர்களா? சேமிக்கும் இடம் அதிகமாக உங்களுக்கு வேண்டுமா? அதற்காக நீங்கள் பயன்படுத்தும் தளம் கூடுதல் கட்டணம் கேட்கிறதா? உங்கள் தனி நபர் சுதந்திரம் இந்த வகை யில் பாதிக்கப்படுகிறதா? அப்படியானால் நீங்கள் கூகுள் தரும் ஜிபோட்டோ ஸ்பேஸ் பயன்படுத்தத் தொடங்கலாம்.



கூகுள் தரும் கூடுதல் வசதிகளையும் அதற்கான பயர்பொக்ஸ் அட் தொகுப்பு குறித்தும் இங்கு காணலாம். கூகுள் தரும் ஜிபோட்டோ ஸ்பேஸ் வசதிக்கு எந்த நிலையிலும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.


பயர்பொக்ஸ் எக்ஸ்ன்ஷன் மூலம் 50 போட்டோக்களை ஒரு தொகுப் பாக அப்லோட் செய்திடலாம்.

மற்ற எந்த இணைய அப்லோடிங் வசதியைக் காட்டிலும் இது ஐந்து மடங்கு வேகத்தில் அப்லோட் செய்கிறது.

பல தளங்கள் குறைந்த அளவே போட்டோக்களை சேமிக்க இடம் தருகின்றன. ஜிபோட்டோ ஸ்பேஸ் இதற்கென வரையறையை விதிக்கவில்லை. ஜிமெயிலுக்கு ஒதுக்கப்படும் 7 ஜிபி மற்றும் கூடுதல் இடம் தரத் தயாராய் உள்ளது. இணையத் தளத்தில் பதிக்கப்படும் போட்டோக்களை மற்றவர்கள் பகிர்ந்து பார்ப்பதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள மக்கள் பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் இருந்தால் ஜிபோட்டோ ஸ்பேஸ் அதனைத் தீர்க்கிறது. நீங்கள் உங்கள் தனிநபர் உரிமையை 100% பாதுகாத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கும் தகவல்களுக்கும் http://www.gphoto space. com/features.html என்ற முகவரியில் உள்ள தளத்தினைப் பார்க்கவும்.

# மை பிக்சர்ஸ்; மை மியுசிக் தேவையா?



நீங்கள் ரெஜிஸ்டரி மூலம் இந்த போல்டரை அழித்திருந்தால் வேர்ட் நீங்கள் இன்ஸ்டோல் செய்கையில் ஏதோ தவறு செய்து விட்டதாக எண்ணி இந்த போல்டரைத்தானே உருவாக்கித் தரும் . அப்படியானால் இதற்குத் தீர்வு என்ன? வேர்ட் தொகுப்பிடம் " நான் பிக்சர் என்பதைத் தேர்ந்தெடுத்தால், இந்த மை பிக்சர்ஸ் போல்டரைத் தேடாதே' என்று அறிவிக்க வேண்டும். 'வேறு ஒரு போல்டரில் தேடு' என்று சொல்ல வேண்டும்.

விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் சில ஆண்டுகளாக நமக்கு வசதிகளைக் கூடுதலாகத் தரும் நோக்கத்தில் சில போல்டர்களை உருவாக்கித் தருகிறது. அவற்றில் MY Pictures மற்றும் MY Music ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவை நம்முடைய டிஜிட்டல் படங்களுக்கும் பாடல்களுக்குமானவை. ஆனால் சிலருக்கு நாம் நம் விருப்பப்படும் வகையில் வேறு பெயர்களில் போல்டர்களை உருவாக்கி படங்களையும் பாடல்களையும் சேவ் செய்து வைக்கலாமே என்று எண்ணுவார்கள். இவற்றை நிரந்தரமாக நீக்கவும் விரும்புவார்கள். அவர்களுக்கான வழிகளை இங்கு காணலாம்.

சில இணைய தளங்களில் இவற்றை நிரந்தரமாக நீக்க ரெஜிஸ்ட்ரியில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு தகவல்கள் உள்ளன. ஆனால் இதில் சிக்கல்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். வேர்ட் போன்ற புரோகிராம்கள் இந்த போல்டர்களைத் தேடுகையில் இவை கிடைக்கவில்லை என்றால் சில நேரங்களில் பைல்களை சேவ் செய்வதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நீங்கள் முதல் முதலாக வேர்ட் தொகுப்பை இன்ஸ்டோல் செய்திடுகையில் உங்களுடைய கிராபிக்ஸ் பைல்களுக்கு வேர்ட் மை பிக்சர்ஸ் போல்டரைத்தான் தொடக்க நிலை இலக்காக அமைத்துக் கொள்கிறது. நீங்கள் இன்ஸெர்ட் மெனு சென்று Pictures என்பதனைத் தேர்ந்தெடுக் கையில், விண்டோஸ் மை பிக்சர்ஸ் போல்டரைத்தான் தேடும்.

இதனை எப்படி மேற்கொள்வது என்று பார்ப்போம்.

✦ டூல்ஸ் (Tools) மெனு விரித்து அதில் ஒப் ஷன்ஸ் (Options) என்பதைத் தேர்ந்தெடுக் கவும். வேர்ட் ஒப்ஷன்ஸ் டயலொக் பொக் ஸினை உங்களுக்குக் காட்டும்.

✦ இதில் File Locations என்ற டேப் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்திடவும்.

✦ அடுத்து Clip Art Pictures என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும்.

✦ இங்கே Modify என்பதில் கிளிக் செய்திடுக.

✦ இப்போது வேர்ட் Modify location என்ற டயலொக் பொக்ஸைக் காட்டும். இங்கு கிடைக்கும் கொண்ட்ரோல் டூல் கொண்டு, வேறு ஒரு போல்டரைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் தேடக்கூடிய போல்டராக, இந்த போல்டர் இனி அமையும் என்பதால், கவனத்துடன் தேர்ந்தெடுத்து, அதனை நினைவில் வைத்துக்கொள்ளவும்.

✦ பின் ஓகே, அடுத்து குளோஸ் பட்டன்களில் கிளிக் செய்து வெளியேறவும்.

இதில் மூன்றாவதாகClipart Pictures என்பதைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், பைல் ஒன்றில் நாம் படம் ஒன்றை இன்ஸேர்ட் செய்திடுகையில், இந்த கிளிக் ஆர்ட் படங்கள் உள்ள போல்டரை, வேர்ட் தேடித்தர வேண்டும் என்பதுதான்.

ஆனால் கிளிக் ஆர்ட் படம் ஒன்றை இன்ஸேர்ட் செய்திட முயற்சிகையில் இந்த போல்டர் திறக்கப்படாது.

இதில் வேடிக்கை என்னவென்றால், நீங்கள் கிளிக் ஆர்ட் போல்டரை அமைக்காவிட்டால், வேர்ட் தானாகவே மை பிக்சர்ஸ் போல்டரைத் தேடும். அதாவது, இங்கு வேர்ட் தானாக, அமைக்கப்பட்ட நிலையில் தேடும் மை பிக்சர்ஸ் போல்டருக்குப் பதிலாக, வேறு ஒரு போல்டரை நாம் அதற்கு அமைத்துத் தருகிறோம்.


போல்டரைப் பொறுத்தவரை, வேர்ட் தொகுப்பில், அது எந்த வகை பைலுக்கும் டிபால்ட் போல்டராக வரையறுக்கப்படவில்லை என்றே தெரிகிறது. மற்ற புரோகிராம்கள் இதனைப் பயன்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் மற்றும் பிற பிரவுசர்கள், மியூசிக் பைலை டவுண்ட்லோட் செய்கையில், இந்த போல்டரில் சேவ் செய்துவைக்கலாம்.

இந்த போல்டரை நீங்கள் டெலீட் செய்திருந்தால், இன்டர்நெட் எக்ஸ்புளோரர், அந்த போல்டரை மீண்டும் உருவாக்கலாம். இந்தபோல்டரை விண்டோஸ் மீடியா பிளேயர் புரோகிராம் பயன்படுத்துகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒபீஸ் 2010; கட்டாயம் மாற வேண்டுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)




### ◆ நிதி ஆளுமை

எக்ஸெல் 2010 தொகுப்பு தரும் ஸ்பார்க்லைன்ஸ் (Sparklines) என்பதன் மூலம் சிறிய சோர்ட்களை ஏற்படுத்தி, உங்கள் நிதி நிலையினை அவ்வப்போது கண்காணிக்கலாம். அனைத்து வகை டேட்டாவிற்கும் இதே போல் தோற்றங்களை ஏற்படுத்தி கவனிக்கலாம்.

### ◆ நெட்வேர்க் தொடர்பு

அவுட்லுக் 2010 தரும் சோஷியல் கனக்டர் மூலம் நாம் பயன்படுத்தும் சோசியல் மற்றும் வர்த்தக நெட்வேர்க்குகளுடன் எளிதாகத் தொடர்பு கொள்ள முடியும்..

இதனைப் பயன்படுத்தி மைக்ரோ சொப்ட் ஷேர் பொய்ண்ட் விண்டோஸ் லைவ் மற்றும் பிற தேர்ட் பார்ட்டி நெட்வேர்க்குகளுடனும் தொடர்பு கொள்ள முடியம்.


### ◆ கட்டளைகள் கை வசம்

ஒபீஸ் தொகுப்பில் நீங்கள் அடிக்கடி பயன்படுத்தும் கட்டளைகளை ரிப்பன் ஒன்றின் மூலம் விரைவாக மேற்கொள்ள வசதி தரப்பட்டுள்ளது.

இது ஒரு முன்னோட்டம் தான். இன்னும் பல புதிய வசதிகள் தொகுப்பு நமக்கு முழுமையாகக் கிடைக்கும்போது தெரியவரும். எனவே இதற்கு மாறலாமா என்பது குறித்த நம் தேவைகள் அடிப்படையிலும், புதிய வசதிகளுக்கு மாறினால் நாம் பெறும் உயர்வுகள் அடிப்படையிலும் முடிவெடுக்கலாம்.




# பழுதடைந்த 'சிடி'யிலிருந்து டேட்டா




சிடியில் ஸ்கிராட்ச், கோடு மற்றும் பிற்பட்டதனால், சிடி டிரைவில் டேட்டா படிக்கப்படவில்லை, வெளியே தள்ளப்படுகிறது. இதற்கு ஏதேனும் தீர்வு உண்டா?

இதற்குத் தீர்வாக ஒரு இலவச புரோகிராம் ஒன்று இருப்பதனை அண்மையில் பார்த்தேன். அந்தப் புரோகிராம் பெயர் CD Roller. இந்தப் புரோகிராம், வழக்கமான விண்டோஸ் டூல்கள் மூலம், சிடி ட்ரைவினால் படிக்க இயலாத, சிடி/டிவிடி/ புளூரே டிஸ்க் ஆகிய டிஸ்க்குகளிலிருந்து டேட்டாவினைப் பெற்றுத் தருகிறது.

பெரும்பாலான சிடிக்களிடம் இது பலனளிக்கிறது. இந்தப் புரோக்கிராமினாலும் படிக்க இயலவில்லை என்றால், டேட்டாவினை அத்தகைய சிடிக்களிடமிருந்து பெறுவது கஷ்டம் தான்.

இந்தப் புரோகிராமினை http://download.cnet.com/CDRoller/301022478_411384331.html என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து பெறலாம். சி.டி. ரோலரின் பதிப்பு 8.81 தற்சமயம் கிடைக்கிறது. இதனை இன்ஸ்டோல் செய்து, படிக்க இயலாத சிடிக்களிடமிருந்து டேட்டா பெற முயற்சிக்கலாம். இதில் ஒரு யு.டி.எப்.ரீடர் (UDF Reader) தரப்பட்டுள்ளது.இது பல முறை எழுதப்பட்ட (Multi Session CDs) சிடிக்களிலும் சிறப்பாக இயங்குகிறது.

சிடிக்களிலிருந்து கவனக் குறைவாக அழிக்கப்பட்ட பைல்களையும் மீட்டுத் தருகிறது. சாதாரணமாக படிக்க இயலாத பைல்களை, ட்ராக் அண்ட் ட்ராப் முறையில் மீட்டுத் தருகிறது. இந்தப் புரோகிராமிலேயே டிவிடி - வீடியோ ஸ்பிளிட்டர் என்னும் வசதி தரப்படுகிறது. இதன்மூலம் டிவிடி வீடியோக்களைப் பிரித்து அமைக்கலாம்.

## இந்தவார டவுண்ட்லோட்

மேலும்/டிவிடி / புளூ ரே டிஸ்க் ஆகியவற்றில் டேட்டா எழுதும் பேர்னர் புரோகிராமும் தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி பிளாஷ் ட்ரைவ்களில் இருந்து காணாமல் போன பைல்களையும் மீட்கலாம்.

இந்தப் பதிப்பில் பல ட்ரக்குகளை ஒரே நேரத்தில் ஸ்கான் செய்திடும் வசதியும் தரப்பட்டுள்ளது.

# நவீன எண் ஜோதிடம் 1

உலகில் தீர்க்க முடியாத பிரச்சினை எதுவுமே இல்லை.
எண்காந்த சித்தங்கள் பூமியில் சிலிர்ப்பான தரிசனங்கள்.
ஆய கலைகள் அறுபத்து நான்கு என்று வரையிட்டு,
அதில் தூய கலை - தெய்வ கலை - மனித வாழ்வை ஒளியாக்கும் மர்ம கலை ஜோதிடக் கலையாகும்.
எண் ஜோதிடம் பிரபஞ்ச ஒருமையின் விஞ்ஞானம்.
சமயத் தன்மைக்கான நுழைவாயில்.

### அறிமுகம்

வலம்புரி வாசகர்களே! உங்கள் எல்லோருக்கும் ஐரோப்பிய உள்ளங்களின் வணக்கத்தோடு எனது நெஞ்சம் நெருங்கிய அன்பான வணக்க்மும் கூட.

இங்கே உங்களை அறிவியல் ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் வெறும் பொழுது போக்குக்கு அன்றி, நெய்யிட்டு ஏற்றும் தீபம் போல் உங்கள் இருள் அகல, சில விடயங்களைப் புரிந்துகொள்ள, எழுத வேண்டிய கால நேரம் என்னை உந்தி உங்கள் முன் அவசியமாக்கி அர்ப்பணிக்கின்றது.

அந்தக்கால தேவதைக்கும் தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தமிழ் அன்பு நெஞ்சங்களுக்கும் தமிழ் மண்ணிற்கும் பணிவான என் இதயம் மலர்ந்த வணக்கம்.

உலகளாவ வாழும் ஜீவ இனங்கள் அனைத்தையும் பிரபஞ்ச இயக்கத்தின் காந்த உந்திப்பே செயற்படுத்துகின்றது. (நாதமும் நம்பரும்). அதில் மனித ஜீவினம் புனிதமான ஓர் அறிவு ஜீவி. அறிவியல் நோக்கில் பிரபஞ்சத்தின் அசைவும் அதன் இயக்கமும் அவன் அறிவின் உந்திப்பில் புகுந்து செயற்படும் இரகசிய நுட்பங்களை இன்று அல்ல, 5000 வருடங்களுக்கு முன்பாகவே அறிந்து பிடித்து அதன் ஒவ்வொரு இயக்கமும் அசைவும், எண்களுக்கும் எழுத்து ஓசைகளுக்கும் உட்புகுந்தே செயற்பட்டு வருகின்றது என்பதை எல்லா விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒத்துக் கொண்டிருக்கின்றது.

இதைப் பலர் ஒத்துக்கொள்ளாவிடினும் அறிவியல் சிந்தையில் இதற்கென்று ஒரு தனிப்பலத்தை, அதன் உள் வேரினை காண்பதற்கு ஊடுருவிச் சென்ற சில ஜோதிட சித்தர்கள் எண்களினதும் எழுத்துக்களினதும் செயற்பாடும் அதன் போக்கினையும் கண்டுபிடித்து கைநழுவ விடாது தம் பின் சந்ததியினருக்கு உதவும் என்ற முறையில் கணிதக் கலையினை ஒப்படைத்துள்ளனர்.

ஆகவே ஜோதிடம் ஒவ்வொருவருடைய சமயத்தன்மைக்கான வாழ்வியலின் கோபுரமும் திறவுகோலும் கூட. அதுமட்டுமல்ல, ஜோதிடம் ஒருமைப்பாட்டின் சிறந்த விஞ்ஞான தன்மை. அதனால் அன்றோ, ஊனக் கண்களுக்கு தெரியாத இந்த மண் உலகத்திற்கு அப்பாற்பட்டிருக்கும் விண் உலகக் கணிகைக்களை அறிந்து இன்று வரை அறிவியல் செயற்பாட்டின் நுட்பங்களால் மேல் உலக கோள்களை அவைகள் இன்றும் குடைந்து குடைந்து விரல் விட்டு சுரண்டிக் கொண்டிருப்பதும் இன்றைய தத்துவ விஞ்ஞானிகளின் ஒருவகை ஜோதிடத் தத்துவ ஆய்வுகள் வாடாத மலராக மலர்ந்திருப்பது போற்றுதற்குரியது.

அன்றைய விஞ்ஞானிகள் விட்டுச் சென்ற எச்சங்களே இன்றைய விஞ்ஞானிகளின் அணையாத மிளிர்ச்சுடர் ஒளியாகும். அவர்களின் வழிகாட்டியை என்றும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அநேகமாக, மிகப் பழைய விடயம் ஜோதிடமாகத் தான் இருக்கவேண்டும். எந்த இரகசியமும் நிரந்தர இரகசியம் அல்ல. மனித குலத்தின் பெருமளவு நன்மைக்காக ஒவ்வொரு இரகசியமும் சரியான நேரம் , சரியான இடம், சரியான மனிதருக்காக காத்திருக்கின்றது. அறிவியல் உலகிலும் இப்படித் தான். சமய உலகிலும் இப்படித்தான். ஜோதிட தீர்ப்பிலும் இப்படித்தான்.

மூன்று விடயத்தை மனிதன் தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

பிறக்கும்போது பிறந்த பிள்ளைக்கு பெரியவனாகி தனக்கு திருமணம் எப்போது நடக்கும். தனக்கு எப்போது பிள்ளை பிறக்கும், தனக்கு எப்போது இறப்பு நேரும். இவை எவ்வகையில் எப்படிப்பட்ட முறையில் எந்த சந்தர்ப்பங்களில் நடக்கும் என்பது கட்டுக்கோப்பாக அறியமுடியாது. அவை மூன்றும் இயற்கை தன் செயற்பாட்டிற்குள் மறைத்து வைத்துக் கொண்டிருப்பது உண்மையான நிலை.

இயற்கையின் செயல்கள் ஒரு மையப்புள்ளியில் இருந்து பிறப்பன. அந்த மையப்புள்ளியின் மையத்தை எந்த மர்மத்தாலும் அறியவும் முடியாது, விளங்கிக் கொள்ளவும் முடியாது. தெளிவு பெற்றாலும் தேர்ந்துகொள்வது கடினம். இவை எல்லாம் கால தேவனின் விளைச்சலில் முளைப்பனவே. பருவம் தவறி முளைப்பன அவை. தக்க காலத்தில் பருவமெய்யாது பட்டுப் போவது உண்டு. காலத்தோடு ஒத்தன. அவை ஞாலத்தோடு (பூமி) ஒத்து வாழும் தகுதியைப் பெற்றனவாகின்றன. (மனித வாழ்வும் அப்படித்தான்)

அகநிலை அறிவியல் பற்றியும் உள்ளார்ந்த மனித விஞ்ஞானம் பற்றியும், கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் நடந்துள்ள ஆய்வுகளின் அளவையும் தரத்தையும் பார்க்கும்போது மனம் திகைத்து போய்விடுகின்றது. ஒருவர் பின் ஒருவராக உள் உலகம் உணர்ந்த மகா ஞானிகளும், விஞ்ஞானிகளும் பிரம்ஹை யின் புதிய புதிய சிகரத்தை எட்டிப் பிடித்துக் கொண்டே இருந்தார்கள். இருக்கின்றார்கள்.

எண் ஜோதிட நிபுணர்
**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

அகநிலையின் யதார்த்தத்தையும் இறுதி அதிப் பிரம்ஹை பற்றிய உண்மை இயல்பையும் மக்கள் உணர்ந்து கொள்ள ஏராளமான புதிய கண்டுபிடிப்புக்களும் யுக்திகளும் செயல்முறைகளும் வளர்ந்து கொண்டுதான் இருந்தன, இருக்கின்றன. (தொடரும்)

## திருவையாற்றில் உப உணவு பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிப்பு

மீள்குடியேற்றம் நடைபெற்ற விவசாய பிரதேசமான கிளிநொச்சி திருவையாற்றில் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிக்கும் பலவித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கிய விவசாயப் பிரதேசமான திருவையாற்றுப் பகுதிக்கு லிப்ட் எரிகேசன் திட்டம் மூலம் கனகாம்பிகைக் குளத்திலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

இத் திட்டம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பல வருடங்களாக மேற்கொள்ளப் படவில்லை.இத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த முன்வருமாறு இப்பகுதி விவசாயிகள் கோருகின்றனர்.

இரணைமடுக்குளம், கன காம்பிகைக்குளம் முதலானவற்றுக்கு சமீபமாக உள்ள இக் கிராமம் கடந்த யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். இப் பகுதி விவசாயிகளால் உருவாக்கப்பட்ட திருவையாறு விவசாய கூட்டுறவுச் சங்கம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (6)

## பரீட்சை முறைகேடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறி வித்துள்ளது.

இவ்வாறு பரீட்சை முறைகேடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறைகேடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சை முறைகேடுகளில் ஈடுபட்டதாக 40 ஆசிரியர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் குறித்த ஆசியர்கள் எதிர்காலத் தில் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட முடியாத வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குறித்த ஆசிரியர்களுக்கு எதிராக மாகாண கல்விச் செய லாளர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பார்கள் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (6)

## விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கான பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் இயற்கை விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணிக் கற்கை நெறிக்கான (B.sc) பதிவுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடை பெறவுள்ளது.

அத்துடன் புதிதாக பதிவு செய்த மாண வர்களுக்கான அறிமுக நிகழ்வும் அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு இலங் கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவும் இக் கற்கை நெறிக்கு பதிவு செய்வதற்காக அனு மதி கிடைத்த அனைவரையும் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய இணைப்பாளர் கேட்டுக் கொண் டுள்ளார். (6-4)

சிவமயம்



# ஆச்சார்ய அபிஷேக நல் ஆசிகள்

(குரு பட்டமளிப்பு)

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களம் மிகு விகிர்தி வருஷம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் (03.06.2010) வியாழக்கிழமை ஷஷ்டித் திதியும், அவிட்ட நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6.50 மணி முதல் 8.41 மணிக்குள் அமைந்த மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில்.

வடகோவை
சிவஸ்ரீ பரம முத்துக்குமாரசாமிக் குருக்களின்
துதீய புத்திரனும்
ஸ்ரீசுந்தர ஆஞ்சனேயர் கோவில்
தில்லையம்பதி சிவகாமி அம்மன் கோவில்
நித்திய அர்ச்சகருமான
**பிரம்மஸ்ரீ முத்து குருபரசர்மா**

இன்றைய தினம் குருஸ்தானம் பெறும் குரு அவர்களிற்கு ஆஞ்சனேயப் பெருமானுடைய திருவருளும் எங்கள் நல்லாசிகளும் கூறி ஆச்சார்ய சேவையில் சூரியஒளி போல பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர்
தர்மகர்த்தா இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
சுவிஸ் கிளை சார்பாக அருள் பத்மநாதன்

(1620)

## வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் வி.கழகம் சம்பியன்

(கரவெட்டி)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கரவெட்டி சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்பட்ட கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில், வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப் போட்டிகள் கடந்த மாதம் 31ஆம் திகதி இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் முதல்சுற்றில்6:2 என்றபுள்ளி அடிப்படையில் முன்னணியில் திகழ்ந்தது.

இரண்டாவது சுற்றில் வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் 10:4 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்று பிரதேச சம்பியன் ஆனது.

இவ் இறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் வெற்றிபெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கேடயத்தை வழங்கினார்.

தலைமையக சமுர்த்தி முகாமையாளர் சு.சிவகுமார் மற்றும் சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி கௌரி குண ரட்ணம் ஆகியோர் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (6-24)

# இந்தியாவின் என்.டி. தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பிய விபரணத்தை வாபஸ் பெறுமாறு இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் முன்னணி தொலைக் காட்சி ஊடகங்களில் ஒன்றான என்.டி.ரீ.வி.யி னால் ஒளிபரப்புச் செய்யப்பட்ட விபரணத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிளட் ஒன் வோட்டர் என்ற தலைப்பில் என்.டி.ரீ.வி. ஒளிபரப்புச் செய்த விபரணச் சித்திரத்தில் உண்மைக்குப் புறம்பான தகவல் கள் வெளியிடப்பட்டுள்ளதாக இந்தியாவிற் கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் எழுத்து மூலம் குறித்த தொலைக் காட்சி சேவைக்கு அறிவித்துள்ளார்.

எனவே குறித்த விபரணச் சித்திரத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று முதல் ஆறு இலட்சம் வரையி லான மக்கள் முட்கம்பிகளிலான தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பேரா சிரியர் செனோய் வெளியிட்ட கருத்து அபத்த மானது எனவும் 30 ஆயிரம் பேர் மட்டுமே தற்போது இடம்பெயர் முகாம்களில் எஞ்சியி ருப்பதாகவும் உயர்ஸ்தானிகர் தனது கடிதத் தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் செனோயின் இந்த கருத்து அவரது கல்வித் தகைமைகளுக்கு இழுக்கை ஏற்படுத்துவதாகவும் முற்றிலும் ஜோடிக்கப் பட்ட பொய்களை அவர் வெளியிட்டுள்ளதா கவும் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

விபரணச் சித்திரத்தில் ஒளிபரப்புச் செய் யப்பட்ட பல காட்சிகள் மூன்று வருடங்க ளுக்கு முன்னர் ஒளிப்பதிவு செய்யப்பட்டவை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விபரணச் சித்திரத்தில் கருத்து வெளி யிட்டுள்ள சில தமிழக மீனவர்கள் அப்பட்ட மான பொய்களை தெரிவித்துள்ளதாகவும் குறிப்பாக இலங்கை இராணுவத்தினர் 300 தமிழக மீனவர்களை படுகொலை செய்துள் ளதாக வெளியான செய்திகளில் எவ்வித உண் மையும் கிடையாதென தெரிவித்த அவர்,

இந்திய கடற்பரப்பிற்குள் பிரவேசித்த இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர் களை தாக்குவதாக சுமத்தப்படும் குற்றச்சாட் டுக்கள் நகைப்புக்குரியதென குறிப்பிட்டுள் ளார்.

பொருளாதார ரீதியாக நன்மை அடையும் நோக்கில் அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரும் இலங்கைத் தமிழர்கள் சிலர் வெளி யிட்டுள்ள கருத்து ஏற்றுக்கொள்ள முடியா தென தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தங்களது புகலிடக் கோரிக் கையை நியாயப்படுத்தும் வகையில் அவர் கள் கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

என்.டி. தொலைக்காட்சி சேவையின் செய்தி ஆக்கத்திறன் குறித்து இலங்கை மிகுந்த நன்மதிப்பை கொண்டுள்ளதாகவும் என். டி தொலைக்காட்சியின் சென்னைப் பிரிவு வெளியிட்டுள்ள இந்த விபரணச் சித்திரம் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா விற்கு விஜயம் செய்ய உள்ள தருவாயில் இவ் வாறான ஆக்கங்களை ஒளிபரப்புச் செய்வது எற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் உண் மையான தகவல்களை வெளியிடுவதற்கு தமக்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (6)

## வைத்தியசாலை திறப்புவிழா

வண் .மேற்கு வைத்தியசாலை (van west clinic and Nursing home) இன்று வியாழக் கிழமை காலை 10.45 மணிக்கு இல 18, ஐய னார் கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலையின் முன்னாள் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி. கங்காதரன், கௌரவ விருந்தினர்களாக வனிக்கா மெடிக்கல்ஸ் உரி மையாளர் கே.என்.இராஜரட்ணம், ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல் வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## தனியார் பஸ்கட்டணங்கள் யூலை முதல் அதிகரிப்பு

இலங்கைத் தனியார் போக்குவரத்து பஸ் கட்டணங்கள் எதிர்வரும் ஜுலை மாதம் முதல் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன கொழும்பு இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜுலை முதலாந் திகதி தனியார் பஸ் கட்டணங்கள் 5 ரூபா முதல் 7 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (6)

# பாடசாலை கரப்பந்தாட்ட அணிகளுக்கான தேசிய பயிற்சி முகாம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை கரப்பந்தாட்ட அணிகளுக் கான தேசிய பயிற்சி முகாம் - 2010 நேற் றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதா னத்தில் ஆரம்பமானது.

நேற்றுக் காலை ஆரம்பமான இப்பயிற்சி முகாமில் தேசிய கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவரும் பொது நிர்வாக உள்நாட்டலுவல் கள் பிரதி அமைச்சருமான டிலான் பெரேரா வின் அழைப்பின் பேரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சுமார் 30 பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவ-மாணவிகள் பங்கு கொள்ளும் இப் பயிற்சி முகாமானது 2015 ஆம் ஆண்டில் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் பொருட்டு வடபகுதி வீர வீராங்கனைகளை தயார்படுத்தும் ஓர் ஆரம்ப முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கரப்பந்தாட்ட பயிற்சி முகாமிற்கு இலங் கையின் பிரபல வர்த்தக நிறுவனமான டி. எஸ்.ஐ தனது முழுமையான அனுசரணை யினை வழங்கியுள்ளது.

நேற்றைய நிகழ்வில் தலைமையுரை யாற்றிய பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, வடபகுதி விளையாட்டுத்துறை வளர்ச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றி வரும் பணிகளை வெகுவாக பாராட்டினார்.

கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் சீர ழிந்து போன வடபகுதியை மீளமைத்து அபி விருத்தி செய்வதில் மட்டுமல்ல விளையாட் டுத்துறை வளர்ச்சியிலும் அமைச்சர் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதையிட்டு தான் பெருமிதம் அடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, பாடசாலை அணிகளுக்கான தேசிய பயிற்சி முகாமை யாழ்ப் பாணத்தில் நடத்துவ தற்காக பிரதி அமைச் சர் டிலான் பெரேரா அவர்க ளுக்கு தமது நன்றிக ளைத் தெரிவித்துக் கொண்டதுடன் இதற்கு முழு அனுசரணை வழங் கும் டி.எஸ்.ஐ. நிறுவனத் திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண் டார்.

அத்துடன் கரப்பந் தாட்ட பயிற்சி மத்திய நிலையமாக யாழ் மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்ததுடன் வடக்கு - தெற்கின் உறவுப்பாலமாக விளை யாட்டுத்துறையும் நிச்சயம் விளங்கும் என்ற நம்பிக்கையினையும் வெளிப்படுத்தினார்.

நேற்றைய நிகழ்வில் முக்கிய அம்சமாக கரப்பந்தாட்ட துறைக்கான பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் பிரதி அமைச்சரினால் யாழ் கரப் பந்தாட்ட அணியின் தலைவர் மற்றும் செயலா ளரிடம் கையளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சகல விளையாட்டு வீர வீராங்கனைகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மற்றும் பிரதி அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் பாடசாலைகளுக்கான தேசிய கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் நிஹால் பெர்ணான்டோ, செயலாளர் சுனில் செனவிரட்ன, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ் வரன், டி.எஸ்.ஐ. நிறுவனத் தலைவர் அனுர சேனா நாயக்க யாழ் . மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் பி. ஏகாம்பரம், செய லாளர் மனோகரன், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் ஓங்காரமூர்த்தி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி பொன் னம்பலம், தென்னிலங்கை பயிற்றுவிப்பா ளர்கள், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரி யர்கள் மற்றும் பாடசாலை அணிகளின் வீர வீராங்கனைகள் பெருமளவில் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (6)




ஆச்சார்ய அபிஷேக

(குருபட்டமளிப்பு)

அழைப்பிதழ்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களம் மிகு விகிர்தி வருஷம் வைகாசித்திங்கள் 20ஆம் நாள் (03.06.2010) வியாழக்கிழமை ஷஷ்டித்திதியும், அவிட்ட நட்சத்திரமும் , சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6.50 மணி முதல் 8.41 மணிக்குள் அமைந்த மிதுன லக்ன சுபமுகூர்த்தவேளையில்.

வடகோவை

சிவஸ்ரீ பரம முத்துக்குமாரசாமிக் குருக்களின்

துதீய புத்திரனும்

ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவில், தில்லையம்பதி சிவகாமி அம்மன் கோவில்

நித்திய அர்ச்சகருமான

பிரம்ம ஸ்ரீ முத்து குருபரசர்மாவுக்கு

சமய, விஷேஷ, நிர்வாண தீக்ஷையும் சிவாச்சார்ய அபிஷேகமும் நிகழ நயினை நாகபூசணி அம்பாள், கோப்பாய் கேணியடி ஆதிபைரவர் சுவாமி இறை திருவருளும், குரு அருளும் பெரியோரின் ஆசியும் அடியார்களின் விருப்பும் கைகூடியுள்ளதால் மேற்படி கிரியை வைபவம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவிலில் நடைபெற இருப்பதால் அந்தண விப்ர சிரேஷ்டர்கள் விழாவில் கலந்து ஆசி வழங்கியும், அடியார் பெருமக்கள் குரு ஆசி பெற்றேகுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

தங்கள் நல்வரவை நாடும்

வரவேற்பாளர்
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவில்,
மருதனார்மடம்,
இணுவில், சுன்னாகம்.
தொ.பே. 021 300 6698

(1612)

இங்ஙனம்
சிவஸ்ரீ மு.ப. முத்துக்குமாரசாமிக்குருக்கள்
ஸ்ரீமதி பார்வதவர்த்தனி
பிரதமகுரு நயினை ஸ்ரீ நாகபூசணி
அம்பாள் தேவஸ்தானம்.


## வங்கியில் வீடமைப்புக்கடன் பெற்றுக்கொள்ளும் மக்களுக்கான ஆலோசனைச் சேவை

### வீடமைப்பு அதிகாரசபை ஏற்பாடு

(கொழும்பு)

வங்கியில் கடன்பெற்று வீடுகட்டுவதற்கு எதிர்பார்க்கும் மக்களுக்கு ஆலோசனை சேவையை வழங்குவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடுகளை செய்துள்ளது.

வங்கிகளில் வீடமைப்பு கடன்களை பெற்றுக்கொள்வதில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித் தார்.

அதற்கிணங்க ஆலோசனை சேவை ஒன்று கடன்பெற்றுக்கொள் ளவுள்ள மக்களுக்காக வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (6-4)

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே. கருடன் சொன்னது. – கண்ணதாசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐ.நாவை எதிர்க்கும் துணிவை இலங்கைக்கு கொடுத்தது யார்?

இலங்கையின் அரசியல் புலத்தில் வெளிவிவகார அமைச்சர்களாக இருந்தவர்கள் இனப்பிரச்சினை நீண்டதூரம் நகர்ந்து செல்வதற்கு பெரும் துணையாற்றினர் என்றால் அது மிகையன்று.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதை தடைசெய்வதில் பெரும் பணியாற்றினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைப்பதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அவர் கூறியதன் உள்நோக்கம் இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை தயாரிப்பதிலிருந்து அரசுக்கு ஆறுதல் கொடுப்பதாகும்.

உலக நாடுகளில் தமிழ்மக்களுக்கு எதிராக அவர் செய்த பிரசாரம் சர்வதேச சமூகத்தை திசை திருப்பியதென்றே கூறவேண்டும்.

லக்ஷ்மன் கதிர்காமர் தனித்து வெளிவிவகார அமைச்சர் என்றல்லாமல், அவர் ஒரு தமிழர் என்ற கோதாவிலும் அவர் கூறியவற்றை உலக நாடுகள் செவிமடுத்தன.

தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோகித போகொல்லாகம வன்னி யுத்தத்தின் போது உலக நாடுகளுக்கு மகா அபிஷேகத்துடன் சோடச உபசரணை செய்து அந்த நாடுகளை தமிழர்களுக்கு எதிரான நிலையில் தக்கவைத்துக் கொண்டார்.

லக்ஷ்மன் கதிர்காமருக்கு சளைக்காமல் போகொல்லாகமவும் தமிழர்களுக்கு எதிரான பிரசாரத்தை செய்திருந்தார்.

ஆனால் அவை வெளிவராத விடயமாகிப் போக, இப்போது அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளிவிவகார அமைச்சர் பதவியை ஏற்றுள்ளார்.

யுத்தத்திற்குப் பின்பான முதலாவது வெளிவிவகார அமைச்சர் என்ற பெருமையைப் பெறும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கான பதிலையும் வழங்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிக்க உலக நாடுகள் உதவ வேண்டுமென்ற கோஷத்தை இனிமேல் இலங்கை அரசு முன்வைக்க முடியாது.

மாறாக யுத்தத்தின் போது அரசு பயங்கரவாதச் செயலை மேற்கொண்டது என்ற ஐ.நாவின் குற்றச்சாட்டை நிராகரிப்பதற்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டிய மிக இக்கட்டான கட்டத்தில் இலங்கை அரசு இருக்கின்றது.

இந்தப் பொறுப்பை செய்யவேண்டியவர் அமைச்சர் பீரிஸ்.

லக்ஷ்மன் கதிர்காமரை மற்றும் ரோகித போகொல்லாகமவை ஒரு மூலைக்குத் தள்ளிவிட்டு வெளிவிவகார அமைச்சரென்றால் அது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தான் என்பதை நிரூபித்துக் காட்டப் புறப்பட்ட அவர் இப்போது கோபப்பட்டு ஐ.நாவையும் தூக்கியெறிந்து பேசும் ரென்சனுக்கு வந்துவிட்டார்.

ஐ.நாவை எதிர்த்துப் பேசும் துணிவை இச்சிறிய நாட்டிற்கு யார் கொடுத்தது என்று கேட்டால்,

ஐ.நா சபையும் உலக நாடுகளும் என்பதே பதிலாகும்.

அதாவது முன்னைய வெளிவிவகார அமைச்சர்களின் பொய்யுரைகளை ஐ.நாவும் உலக நாடுகளும் நம்பாமல் இருந்திருந்தால் இன்றைக்கு ஐ.நா சபையை தூக்கி எறியும் துடுப்பு இலங்கைக்கு அறவே இருந்திருக்காது என்பதே நிஜம்.

# மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துமாறு சிறிதரன் எம்.பியிடம் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் தருமபுரம், கண்ணகைபுரம், மயில்வாகனபுரம், புன்னைநீராவி, பிரமந்தனாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கான மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உரியவர்களை வலியுறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் குறித்த கிராம மக்களின் அழைப்பின் பேரில் அவர்களைச் சந்தித்தபோதே இக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது கிராமங்கள் ஒன்றிலும் முழுமையான மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. மீள்குடி யேற்றப்பட்டவர்களுக்கு தறப்பாள்கள் தவிர்ந்த எந்தவித வீட்டுத் தளபாடப் பொருட்களும் வழங்கப்படவில்லை. ஏனைய மீள்குடியேறிய மக்களுக்கு தகரம், மரந்தடி, சீமெந்து போன்ற பொருட்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது ஆனால் எமக்கு அவற்றில் எந்தப்பொருட்களும் வழங்கப்படவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் முழுமையாக இருந்த வீடுகளில் பெரும்பாலானவை தற்போது தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

பலமாதங்களுக்கு முன்னர் எமது மண்ணில் இருந்து இடம்பெயர்ந்த நாம் தற்போது எமது ஊர்களுக்குத் திரும்புகின்ற நிலையில் எமது தொழில் ரீதியான முனைப்புக்களை மேற்கொள்ள உரியவர்களிடமிருந்து தொழில் வாய்ப்புக்களையும் தொழில்களுக்கான மூலதனங்களையும் மூலப் பொருட்களையும் பெற்றுத்தர வேண்டும் போன்ற கோரிக்கைகளை அக் கிராமங்களின் மக்கள் முன்வைத்தனர்.

இதன்போது தர்மபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகளின் மனு கையளிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் செ.புஸ்பராசா மனுவினை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தார். அதன்பின்னர் மக்கள் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினரும், முற்றாக அழிக்கப்பட்டுள்ள தருமபுரம் இலக்கம் ஒன்று அரசின் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் மக்களின் வாழ்விடங்கள், மீள்குடியேற்றத்திற்காக மக்கள் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்டுள்ள தருமபுரம் மகா வித்தியாலயம் உட்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களின் நிலைப்பாடுகளை கேட்டறிந்தார். (ச)

## வடக்கு - கிழக்கில்

# மின்சார இணைப்புகள், மின்கட்டமைப்பு அமைக்க 121 மில்.டொலர்கள் ஒதுக்கீடு

(கொழும்பு)

மின்சாரத்துறை அபிவிருத்திக்காக இந்த வருடம் 5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது.

அத்துடன் வடக்கு -கிழக்கில் மின்சார இணைப்புகள், மின்கட்டமைப்பு என்பவற்றை அமைக்க 121 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி. பெர்டிணண்டஸ் தெரிவித்துள் ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு அபிவிருத்திக்காக 36 மில்லியன் டொலர்கள் வெளிநாட்டு கடனுதவியாக கிடைத்துள்ளது. இது தவிர அம்பாறையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 25 மில்லி யன் உதவியுடன் மின்சார திட்டங்கள் ஆரம் பிக்கப்பட்டுள் ளன.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் சீனா அரசின் 60 மில்லியன் டொலர் உதவியுடனும் வடமத்திய மாகாணத்தில் 53 மில்லியன் டொலர் செலவிலும் ஊவா மாகாணத்தில் 60 மில்லியன் டொலர் செலவிலும் பல மின்சாரத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# வடக்கு – கிழக்கு சிறார்களிடையே கடுமையான குறைபோசாக்கு நிலவுகிறது

## சுகாதார அமைச்சின் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர், சிறுமியரிடையே கடுமையான குறைபோசாக்கு நிலவி வருவதாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

சனத்தொகைப் பரம்பல் மற்றும் போசாக்கு நிலைமை குறித்து அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய ரீதியில் குறைபோசாக்கு நிலைமை 29 வீதமாக காணப்படுவதாகவும் வடக்கு -கிழக்கில் சிறுவர் குறைபோசாக்கு நிலைமை 46 வீதமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரும்புச் சத்து , சின்க் சத்து அயடீன் சத்து மற்றும் விட்டமின் ஏ சத்து ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று குறைபாட்டினால் அதிகளவான சிறுவர் சிறுமியருக்கு குறைபோசாக்கு நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில சிறுமியரை விடவும் சிறுவர்களுக்கு இடையில் அதிகளவில் குறைபோசாக்கு நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. 12 முதல் 35 மாதம் வரையிலான குழந்தைகளில் அதிகளவானோர் உரிய எடையை கொண்டிருக்கவில்லை என தெரி விக்கப்படுகிறது.

குறைபோசாக்கு நிலைமைக்கு தாய்மார்களின் கல்வித் தகுதியும் பிரதான காரணியாக அமைகின்றதென ஆய்வுத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. வடக்கு கிழக்கு குறைபோசாக்கு நிலைமை காணப்படும் வீதம் (மாவட்ட ரீதியில்) வருமாறு;

மட்டக்களப்பு - 53 வீதம், அம்பாறை - 44 வீதம், திருகோணமலை - 45 வீதம், வவுனியா - 51 வீதம், யாழ்ப்பாணம் - 43 வீதம் (6)

# சாயிராம் எனும் நாமம்



சாயிராம் என்னும் நாமம் தனி மனித உள்ளத்தில் மட்டுமல்லாது, உலகம் பூராகவும் அமைதியை கொண்டுவரும் தனித்துவமும், தத்துவமும் அமைந்ததான மூல மந்திரமாகும். இன, மத,உயர்வு, தாழ்வு அற்ற, சகலர்க்கும் பொதுவான அரும்பெரும் மருந்தாகும். உண்மையாக! சாய்ராம், சாய்ராம் என்றிட உள்ளம் பளிங்கு போல் மிளிர்ந்து வரும். சாய்ராம்,சாய்ராம் என்றிட –உள்ளத்தில் உள்ள பயம் , வெருட்சி எல்லாம் பறந்தோடும். சாய்ராம்,சாய்ராம் என்றிட–நோய் பிணி சகலதும் இருந்த இடம் தெரியாது அற்றுவிடும்.

இறைவன் உண்டென்பதை உணர்கின்றோம். ஆனால் எங்களிடம் எல்லாம் உண்டென்பதை உணரும் போது இறைவனை உணர மறுக்கின்றோம். எந்நேரமும் இறைவனை உணரும் உள்ளம் நீதி, நேர்மை,தர்மத்துக்கு அஞ்சும் ஆணவம் அற்றே விடும். அநீதிக்கும் அதர்மத்துக்கும் அஞ் சாத வீரம் உதயமாகும்.

நான் ஒரு சமயத்தை சார்ந்தவனாகவோ ,ஒரு குழுமத்தை பிரபல்யமாக்கவோ நான் இங்கு வரவில்லை. உங்கள் உள்ளத்தில் அன்பெனும் ஒளியை ஏற்றவே வந்துள்ளேன் என அருளுகின்றார் பாபா . சத்தியமாகவே ! சத்தியம் என்னும் இறைவன் நம் முன்னே நடமாடி வருகின்றார்.

இச் சத்தியத்தைப் பார்த்து உணர அவர் அருளை பெற இன்றே முயலுவோம். இச்சத்தியத்தை கற்றுணர்ந்தவரை விட கண்டு உணர்ந்தவர் ஏராளம். தனது வருகையை ஒட்டி பாபாவே அளுகின்றார், ஒவ்வொரு சமயத்தவனும் உண்மைச் சமயத்தவனாக இல்லை. சமயத்துக்கு ஏற்ப சமயத்தை நாடுபவனாகவும் மதத்தின் பெயரால் மதம் கொண்ட வனாகவும் இருக்கின்றான். நீ ஒரு இந்துவாக இருந்தால் நல்ல இந்துவாக இரு. நீ ஒரு கிறிஸ்தவனாக இருந்தால் ;பூரணமான கிறிஸ்தவனாக இரு. ஒரு முஸ்லிமாக இருந்தால் போற்றப்படும் முகமதியனாய் இரு. இதுவே எனது விருப்பமும் விண்ணப்ப மும் கூட.

மனிதன் கடவுளே.நீயும் கடவுள்.நானும் கடவுள்.ஆனால் நீ உன்னை உணரமுடியாது இருக்கின்றாய்.இதுவே வித்தியாசம் என அருளுகிறார் பாபா.

இதுவரை எட்டு வடிவில் இருந்த வேதவாக்கியங்கள் யாவும் பாபாவின் காலத்திலோ அவரின் உடல் சமாதி பெறுங்காலத்திலோ நிஜமாகும் என்பது திண்ணம்.ஒன்றே குலம்; ஒருவனே தேவன்.அது சாயி தேவன்.கடந்த காலங்களில் மனித அவதாரம் எடுத்த இறைவன் போதனைகள்ஒவ்வொரு மார்க்கத்துக்கும் சொந்தமாக்கியது மனித இனம்.மொத்த மனித இனத்தையும் இறைவனுக்கே சொந்தமென்றது சாயிமதம்.

**ஜெய்சாயிராம் யாதவன்**

# பாகிஸ்தான் மருத்துவமனைக்குள் புகுந்து தீவிரவாதிகள் சுட்டதில் 12 பேர் பலி

(லாகூர்)

பாகிஸ்தானில் மருத்துவமனைக்குள் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் புகுந்து கண் மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நோயாளிகள் உட்பட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து லாகூர் நகர அரச உயரதிகாரி சாஜ்ஜத் பூட்டா என்பவர் கூறியதாவது,

பாகிஸ்தானின் லாகூர் நகரில் மருத்துவமனைக்குள் 4 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் பொலிஸ் உடையில் சென்றனர். திடீரென நோயாளிகள் உட்பட அங்கிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டனர். இதனால் உயிருக்குப் பயந்து நோயாளிகள் தலைதெறிக்க ஓடியதால் மருத்துவமனை போர்க்களம் போல மாறியது.

தகவலறிந்து கமாண்டோ படையினர் விரைந்து வந்தனர். மருத்துவமனையை சுற்றிவளைத்து தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர். தீவிரவாதிகள் தப்பிக்கும் நோக்கில் நோயாளிகள் சிலரை பணயக் கைதியாக சிறைப் பிடித்தனர்.

இதனால் பொலிஸார் திகைத்து நின்ற நேரத்தில் தீவிரவாதிகள் தப்பியோடினர். இந்த திடீர் தாக்குதலில் 3 பொலிஸார் உட்பட 12 பேர் குண்டடி பட்டு இறந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

கடந்த வெள்ளியன்று மசூதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 80 பேர் பலியாகினர்.

அந்த பரபரப்பு ஓய்வதற்குள் மருத்துமனையில் நோயாளிகளை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.



(6)

## குடிநீர் பிரச்சினை தீர்க்க சாயி பாபாவிடம் கோரிக்கை



(புட்டபர்த்தி)

புட்டபர்த்தி சத்ய சாயி பாபாவிடம் ஆந்திர முதல்வர் ரோசய்யா ஆசி பெற்றார். ஐதராபாத்தில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் கடந்த திங்கட்கிழமை மாலை 5மணிக்கு புட்டபர்த்தி சாயி பாபா ஆசிரமத்திற்கு வந்த ரோசய்யா அங்குள்ள சாய் குல்வந்த வளாகத்தில் சத்ய சாயி பாபாவை தரிசனம் செய்தார்.

ஆசிரமத்தில் 30 நிமிடங்கள் தங்கியிருந்த ரோசய்யாவை பாபா ஆசீர்வதித்தார். இருவரும் 10 நிமிடங்கள் தனியாக பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் நிருபர்களிடம் பேசிய ரோசய்யா "ஆந்திர மாநிலத்தில் பல முக்கிய நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் குடிநீர் பற்றாக்குறை நிலவுகிறது. குடிநீர் பிரச்சனையை தீர்க்க உதவும் படி சத்யசாயி பாபாவிற்கு கோரிக்கை விடுத்தேன்" என தெரிவித்தார். (6)

# — இஸ்ரேல் அரசுக்கு — உலக நாடுகள் கண்டனம்

(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்தின் காசா பகுதிக்கு நிவாரணப் பொருட்களைக் கொண்டு சென்ற துருக்கி அமைதிக்குழுவினர் 15பேரை கொன்ற இஸ்ரேல் படையினருக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையே பிரச்சினைக்குரிய காசா பகுதிக்கு அமைதிக் குழுவினர் நிவாரணப் பொருட்களை கப்பல்களில் எடுத்துச் சென்றனர்.

அப்போது இஸ் ரேல் கடற்படையினர் சுற்றிவளைத்து தாக்கு தல் நடத்தியதில் 15பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிரீஸ் தலைநகர் ஏதென்சில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தை பாலஸ்தீன ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.

இஸ்ரேலின் அத்துமீறலை உலகத் தலைவர்கள் கண்டித்து வருகின்றனர். இதையடுத்து, ஐ.நா.பாதுகாப்பு சபை கூட்டம் அவசரமாக கூடி நிலைமை பற்றி விவாதித்தது.

அமெரிக்கா சென்றிருந்த இஸ்ரேல் பிரதமர் பென்சமின், அதிபர் ஒபாமாவை சந்திக்காமல் அவசரமாக ஜெருசலேம் திரும்பி அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினார். (6)

## ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற

# அமெ. ஏவுகணை தாக்குதலில் அல்கொய்தா தளபதி பலியானார்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா இயக்கத்தின் தலைவர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள முஸ்தபா அபு அல் யாசித் அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் பலியானார்.


ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதலை நடத்திவரும் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர் முஸ்தபா அபு அல் யாசித். இவர் அல்கொய்தா இயக்கத்தின் தலைவர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் இருந்தார். 54 வயதான இவருக்கு சையத் அல் மஸ்ரி என்றும் பெயர் உண்டு. இவர் ஒசாமா பின்லேடனின் உறவினரும் ஆவார்.

இவர் அல்கொய்தா இயக்கத்தில் எல்லாமாகவும் இருந்தார். நிதி விவகாரங்கள், திட்டமிடுதல் என அனைத்திலும் இவருக்கு பங்கு உண்டு.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் முகமது அட்டா, மார்வான் அல் ஷேரி வாலி அல் ஷேரி ஆகியோருக்கு டுபாய் வழியாகப் பணத்தை அனுப்பியவர் யாசித் தான்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த இவர் அந்த இயக்கத்தின் 2ஆம் இடத்தில் இருக்கும் அல் ஜவாஹிரியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். எகிப்து அதிபர் சதாத் கொலையில் தொடர்பு இருந்ததாகக் கூறி சிறைத் தண்டனை அனுபவித்தார்.

தன் குடும்பத்தினருடன் பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் தங்கி இருந்தபோது, அவர் இருந்த வீட்டின் மீது அமெரிக்க இராணுவத்தின் ஆள் இல்லாத விமானம் ஏவுகணைகளை வீசித்தாக்கியது.



இதில் அவர் குடும்பத்தினருடன் பலியானார்.

மனைவி, அவரது மகள்களில் 3பேர், பேத்தி ஆகியோரும் பலியானார்கள். இவர்கள் தவிர அந்த வீட்டில் இருந்த சில ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் பலியானார்கள். இந்த சம்பவம் 2 வாரங்களுக்கு முன்பு நடந்தது.

அவர் பலியானதை அல்கொய்தா தன் இணையத்தளம் மூலம் உறுதிப்படுத்தி உள்ளதை அமெரிக்க அதிகாரி ஒருவரும் தெரிவித்தார்.

அவரது மரணம் அல்கொய்தா இயக்கத்துக்கு மிகப் பெரிய இழப்பு ஆகும் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏவுகணை தாக்குதலில் பலியான யாசித் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தவர் ஆவார்.

கடந்த ஆண்டு இணையத்தளத்தில் அல்கொய்தா வெளியிட்ட வீடியோவில் தோன்றி பாகிஸ்தானை தாக்க இந்தியா முயன்றால், மும்பை தாக்குதல் பாணியில் மேலும் பல தாக்குதல்கள் இந்தியாவில் நடத்தப்படும் என்று மிரட்டல் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# கௌதமாலாவில் புயல், வெள்ளத்துக்கு பலியானோர் 150 ஆக அதிகரிப்பு

(கௌதமாலா சிட்டி)

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக 150 பேர் பலியாகியுள்ளனர்.

கௌதமாலாவில் கடந்த வாரம் *அகதா* என்ற புயல் தாக்கியது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் பெரும்பாலான பகுதிகள் மூழ்கின. ஏராளமான இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. வீதிகள் பல இடங்ளில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன.

இதனால் நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிமல்டெனான்கோ மாகாணத்தில் மட்டும் 60 க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். பராஜ்பி என்ற கிராமத்தில் நிலச்சரிவில் மூன்று வீடுகள் புதையுண்டதில் 11 பேர் பலியாகினர் . கிராம மக்கள் ஒன்று சேர்ந்து புதையுண்ட சடலங்களை மீட்டு வருகின்றனர். (6)

# ஜப்பானிய பிரதமர் யுக்கியோ ஹட்டயாமா பதவியை இராஜினாமா செய்துள்ளார்



(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் யுக்கியோ ஹட்ட யாமா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஒக்கினோவாவில் காணப்படும் அமெரிக்க இராணுவ தளத்தை அகற்றுவ தாக அளித்த வாக் குறுதியை நிறைவேற்ற முடியாத காரணத் தினால் அவர் பதவியை இராஜினாமா செய் துள்ளார்.

ஹட்டயாமா எட்டு மாதங்கள் மட்டுமே பிரதமர் பதவியை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள தேர்தல்களில் அவரது ஜப்பான் ஜனநாயகக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு மிகவும் குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

63 வயதான ஹட்டயாமா கடந்த நான்கு வருடங்களில் ஜப்பானில் ஆட்சி நடத்திய நான்காவது பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்குகட்சிக்குள் அதிகளவு ஆதரவு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஹட்டயாமா பிரதமராக பதவி வகித்தால் தேர்தல்களில் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்பு கிட்டாது என கட்சி உறுப்பினர்கள் கருதியதனால் அவர் மீது பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்துள்ளனர். (6)

# உலகின் அதிவேக கணனிகளில் சீன தயாரிப்புக்கு 2 ஆம் இடம்

(பீஜிங்)

உலகின் அதிவேக கம்ப்யூட்டர்களில் சீனாவின் சமீபத்திய தயாரிப்புக்கு 2ஆவது இடம் கிடைத்துள்ளது. அறிவியல் ஆராய்ச்சி, பொறியியலில் சுப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன.

அமெரிக்காவின் டென்னீசைச் சேர்ந்த கிரே ஜாகர் கண்டுபிடித்த சுப்பர் கம்ப்யூட்டர் உலகின் அதிவேக சுப்பர் கம்ப்யூட்டராக நீடிக்கிறது. சீனா சமீபத்தில் தயாரித்த கம்ப்யூட்டர், ஐரோப்பா, ஜப்பான் தயாரிப்புகளை பின்னுக்குத் தள்ளி 2ஆவது இடத்தை இடம்பிடித்துள்ளது. (6-4)



## இத்தாலி, இங்கிலாந்து அணிகள் அறிவிப்பு

உலகின் 2ஆவது மிகப் பெரிய விளையாட்டு திருவிழா உலகக் கோப்பை கால்பந்தாட்ட தொடர் ஆகும். 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த தொடர் நடைபெறுகிறது. தற்போது உலகக்கோப்பை கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகிறது. இதில் 32 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்நிலையில் விளையாடும் பெரும் பாலான அணி வீரர்கள் அறிவிக்கப்பட்டு விட்டனர். உலகக்கோப்பை போட்டிக்கான அணி வீரர்களை அறிவிக்க நேற்று முன்தினம் கடைசி நாள் ஆகும். இந்த நாளில் 9 நாட்டு அணிகள் அறிவிக்கப்பட்டன. இதில் இத்தாலி இங்கிலாந்து அணிகள் முக்கியமானவை ஆகும்.

இத்தாலி அணியில் இருந்து ரோசி, மேடியா சசானி ஆகியோர் நீக்கப்பட்டனர். இத்தாலி அணி எப் பிரிவில் இடம் பெற்றுள்ளது. பராகுவே, நியூசிலாந்து, சுலோவாக்கியா ஆகிய நாடுகளும் அந்த பிரிவில் இடம் பெற்றுள்ளன.

இங்கிலாந்து அணியில் வால்காட் நீக்கப்பட்டுள்ளார். பயிற்சி முகாமில் இடம் பெற்ற வீரர்களில் 7 பேர் நீக்கப்பட்டனர். பயிற்சியாளர் பேபியோ கேப்லோ எடுத்த இந்த முடிபு ஆச்சரியத்தை அளித்துள்ளது.

இங்கிலாந்து அணி சி பிரிவில் இடம் பெற்றுள்ளது. அமெரிக்கா, அல்ஜீரியா ஆகிய நாடுகளும் அந்த பிரிவில் இடம் பெற்றுள்ளன. இங்கிலாந்து அணி தொடக்க ஆட்டத்தில் அமெரிக்காவை 12ஆம் திகதி சந்திக்கிறது.

# உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர்
# இலங்கைக்கு வரும் ரசிகர்கள் தங்குவதற்கு சொகுசு கப்பல்

(கொழும்பு)

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளைக்காணவரும் ரசிகர்களுக்காக மிகவும் வித்தியாசமாக சொகுசு கப்பல் ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்ய உள்ளது.

எதிர்வரும் 2011இல் இந்தியா, இலங்கை, பங்களாதேஷில் உலகக்கோப்பைக் கிரிக்கெட் தொடர் (பெப்-19, ஏப்-2) நடக்கிறது. பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக பாகிஸ்தானுக்கு வாய்ப்புமறுக்கப்பட்டது. 43 நாட்கள் நடக்கும் இத்தொடரின் இறுதிப் போட்டி ஏப்பிரல் 2ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடக்கிறது.

**புதிய மைதானம்**

உலகக் கோப்பை தொடருக்காக இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில், சூரியவேவா என்ற பெயரில் புதிய மைதானம் கட்டப்பட்டுள்ளது.

இங்கு பெப்ரவரி 20ஆம் திகதி நடக்கும் போட்டியில் இலங்கை, கனடா அணிகள் மோதுகின்றன. பின் பெப்ரவரி 23ஆம் திகதி நடக்கும் போட்டியில் பாகிஸ்தான் அணி, கென்யா வை எதிர்கொள்கிறது.

இப்பகுதியில் தங்கும் வசதி அதிகம் கிடையாது. ஆனால் சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைப்படி, போட்டி நடக்கும் மைதானத்தின் அருகில் 500 முதல் ஆயிரம் பேர் வரை தங்குவதற்கு ஏற்ற 5 நட்சத்திர வசதிகொண்ட ஹோட்டல்கள் இருக்க வேண்டும்.

இதையடுத்து ஆயிரக்கணக்கில் வரும் ரசிகர்கள் தங்குவதற்காக பிரமாண்டமான சொகுசு கப்பல் ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்கிறது.

இது குறித்து உலகக் கோப்பை தொடர் ஏற்பாடுகளை கவனிக்கும் இலங்கை அணியின் அதிகாரி சூரஜ் பாண்டெனியா கூறுகையில்,

சூர்யவேவா மைதானம் அமைந்துள்ள பகுதியில் இரண்டு அணிகள் தங்குவதற்கு மட்டுமே 5 நட்சத்திர ஹோட்டல் வசதியுள்ளது.

எனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர்கள் தங்குவதற்காக சொகுசு கப்பலை வாடகைக்கு எடுக்கவுள்ளோம் இதில் ரசிகர்கள் உட்பட அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் தங்கலாம் என்றார்.

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் பெடரர் அதிர்ச்சித் தோல்வி

(பரிஸ்)

பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் உலகின் நம்பர்-1 வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அதிர்ச்சித்தோல்வியடைந்து வெளியேறினார்.

பெண்கள் ஒற்றையர் அரையிறுதிக்கு ரஷ்யாவின் டெமன்டீவா முன்னேறினார். பிரெஞ் தலைநகர் பரிஸில் பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் டென்னிஸ் தரவரிசையில் நம்பர்-1 இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தின் ரோஜர்பெடரர் 7ஆவது இடத்தில் உள்ள சுவீடனின் ரொபின் சாடர்லிங்கை எதிர்கொண்டார்.

இதன் முதல் செட்டை பெடரர் 6-3 என வென்றார். ஆனால் அடுத்தடுத்த செட்களில் சாடர்லிங் பெடரருக்கு அதிர்ச்சியளித்தார். இரண்டாவது செட்டை 6-3 என கைப்பற்றிய சாடர்லிங் அடுத்த இரு செட்களையும் 7-5, 6-4 எனவென்றார்.

இதையடுத்து 6-3, 3-6, 5-7, 4-6 என்ற செட்கணக்கில் பெடரர் அதிர்ச்சித்தோல்வி அடைந்து வெளியேறினார். இதன் மூலம் கடந்த ஆண்டு நடந்த பிரெஞ் ஓபன் இறுதிப் போட்டியில் பெரடரிடம் அடைந்த தோல்விக்கு சாடர்லிங் பதிலடி கொடுத்துள்ளார்.

**டெமன்டீவா வெற்றி**

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் ரஷ்யாவின் எலினா டெமன்டீவா சக வீராங்கனை நடியா பெத்ரோவாவை சந்தித்தார். இதன் முதல் செட்டை 6-2 என பெத்ரோவா வென்றார். ஆனால் அடுத்த இரு செட்களில் எழுச்சி கண்ட டெமன்டீவா 6-2, 6-0 என கைப்பற்றினார்.

இதையடுத்து 2-6, 6-2, 6-0 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்ற டெமன்டீவா அரையிறுதிக்கு முன்னேறினார்.

**அதிர்ச்சித் தோல்வி**

மற்றொரு காலிறுதியில் மூன்றாவது இடத்தில் உள்ள டென்மார்க்கின் ஹரோலின் வோஸ்னியாக்கி 17ஆவது ரேங்கில் இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியானேவை எதிர் கொண்டார்.



இதன் மூலம் செட்டை பிரான்செஸ்கா 6-2 என எளிதாக கைப்பற்றினார். இதையடுத்து இரண்டாவது செட்டில் வோஸ்னியாக்கி எழுச்சி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தனது அபார ஆட்டத்தை தொடர்ந்த பிரான்செஸ்கா அந்த செட்டையும் 6-3 என தன்வசப்படுத்தினார். இதையடுத்து 2-6, 3-6 என்ற நேர் செட்களில் வோஸ்னியாக்கி அதிர்ச்சித்தோல்வியடைந்து வெளியேறினார். வெற்றிபெற்ற பிரான்செஸ்கா, கிராண்டாஸ்லாம் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறுவது இதுவே முதன்முறை.

**காலிறுதியில் ஜான்கோவிச்**

பெண்கள் ஒற்றையரின் நான்காவது சுற்றுப்போட்டியில் சேர்வியாவின் ஜெலீனா ஜான் கோவிச், சிலோவோகியாவின் டேனியலா ஹண்டுசோவாவை சந்தித்தார். இதில் 6-4, 6-2 என்ற நேர் செட்களில் ஜான்கோவிச் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை வீழ்த்தியது கொக்குவில் இந்து

கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவினையொட்டி கல்லூரியின் விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தி வரும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. தொடக்கம் முதல் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்து வந்தது.

எனினும் இறுதி விக்கெட்டுக்களுக்காக களமிறங்கிய பிரகாஸ், மயூலக்ஸனின் துடுப்பாட்டத்தினால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங் களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் மயூலக்ஸன், பிரகாஸ், கிரிசோபன் முறையே 20,5,14 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பாக கார்த்திக், இராகுலன், ஜனுதாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக்கைப் பற்றினர்.

107 என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி பங்குஜன், இராகுலனின் அதிரடியான துடுப்பாட்டதினால் 9 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இராகுலன் 24 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 40 ஓட்டங்களையும், பங்குஜன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ச-5)

# பந்துவீச்சாளர்கள் அபாரம்! மத்திய கல்லூரி அணி இலகு வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவினையொட்டி கல்லூரியின் விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தி வரும் இருபது -20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதற்கிணங்கக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாமல் 15.2 ஓவர்களில் 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

புருசோத்மன், குவின்ரன் முறையே 19,13 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக வதூஸனன் 3 விக்கெட்டுக்களையும், தர்ஷன், திவாகர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

60 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 8.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும், வதூ ஸனன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

# உசைன் போல்ட் உபாதையினால் பாதிப்பு

நட்சத்திர குறுந்தூர ஓட்டவீரர் உசைன் வோல்ட் உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள டயமண்ட் மெய்வல்லுநர் போட்டிகளில் போல்ட் பங்கேற்கமாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

உலகின் மிகவேகமான ஓட்டவீரர்களாக கருதப்படும் உசைன் போல்ட்டும் அமெரிக்காவின் டைசன் கேயும் இந்தப்போட்டியில் சந்திக்கவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உபாதை காரணமாக 2,3 வாரங்கள் ஓய்வெடுக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாக போல்ட் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் ஒஸ்டராவில் நடைபெற்ற ஐ.ஏ.ஏ.எப். உலக சம்பியன் சிப் போட்டியில் 300 மீற்றர் ஓட்டப்போட்டியில் உலக சாதனையை சில நொடிகளில் போல்ட் தவற விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 100X4 அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகளில் உசைன் போல்ட் உலகசாதனைபடைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர்-2010 தென்னாபிரிக்கா
SOUTH AFRICA 2010 FIFA WORLD CUP
இன்னும் ௯ நாட்கள்

CIMA Accountant ஆக வேண்டும் என கனவு காண்கிறீர்களா?
உங்கள் கனவிற்கு A/L or O/L பெறுபேறுகள் தடையா?
நீங்கள் உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கற்கவில்லையா?
CIMA ற்கு ஆங்கிலம் ஒரு தடையா?
100% சித்தி
CIMA UK
வங்கிகள் மூலமான கடன் வசதிகள்
Job Gurantee Skill Migration, Australia,Canda,UK
நீங்கள் 16 வயதை கடந்திருந்தால் மட்டும் போதுமானது.
வர்த்தகப்பிரிவு தவிர்ந்த எனைய பிரிவு மாணவர்களிற்கு விசேட பிரிவு.
CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்
MCS
* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months)
Free
Supported By UNDP/JRRP
Call 772395895
பதிவுகளுக்கு 05-06-2010 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

# தமது பாடசாலையின் ஊடாகவே...

களில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற வுள்ள கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பரீட்சை விண்ணப்பங்களைத் தமது நிரந்தரப் பாடசாலைகளின் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த மாணவர்களின் வசதி கருதி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு முடிபெடுக்கப்பட்டது.

**கிளிநொச்சி கல்வி வலய மாணவர்களுக்கு**

கிளிநொச்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட 63 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் தமது விண்ணப்பங்களை நேரடியாகப் பாடசாலைகளுக்குச் சென்று அதிபர் ஊடாக அனுப்பி வைக்க முடியும்.

அத்துடன் மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்வரும் 7,8,9 ஆம் திகதிகளில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சென்று தமது விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உரிய அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டும்.

**முல்லைத்தீவு கல்வி வலய மாணவர்களுக்கு**

முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட மீள ஆரம்பமாகியுள்ள பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் தமது பாடசாலைகளுக்குச் சென்று அதிபர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

அத்துடன் மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு அருகில் முல்லை இந்து ஆரம்பப் பாடசாலையில் இயங்கும் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்கு எதிர்வரும் 7,8,9 ஆம் திகதிகளில் நேரடியாகச் சென்று தமது பரீட்சை விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உரிய அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டும்.

**துணுக்காய், வவு.வடக்கு,மடு கல்வி வலய மாணவர்களுக்கு**

துணுக்காய், வவுனியா வடக்கு மற்றும் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரும்பாலான பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்களூடாக அனுப்பி வைக்க முடியும்.

இதுவரை மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தமது பாடசாலைக்குரிய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு எதிர்வரும் 7,8,9 ஆம் திகதிகளில் நேரடியாகச் சென்று விண்ணப்பங்களை உரிய அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டும்.

இதில் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் புளியங்குளத்திலும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் மல்லாவி மத்திய கல்லூரியிலும் மடு வலயக் கல்வி அலுவலகம் வண்ணாமோட்டையிலும் இயங்கி வருகின்றது.

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களின் விண்ணப்பங்களை அவர்களுடைய கல்வி வலய அதிகாரிகள் நேரடியாகச் சென்று பெற்றுக் கொள்வார்கள்.

எனவே மேற்கண்ட நடைமுறைகள் மூலம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் போதே பரீட்சைப் பெறுபேறு, எஸ்.டி.ஏ. (SDA) பெறுபேறு என்பன சீராகப் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார். (ச-5)

# பூநகரி-குருநகர் படகுச் சேவை ஆரம்ப நிகழ்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிக்கும் குருநகருக்கும் இடையிலான படகுச் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்படவிருந்த போதும் அது ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவிருந்தனர்.

இந் நிலையில் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தித் துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் நாளில் ஆரம்பித்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தரை வழியாக இரண்டரை மணித்தியாலங்கள் மேற்கொள்ளும் பயணத்தை படகுச் சேவையின் மூலம் சுமார் 45 நிமிடங்களுக்குள் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# முல்லைத்...

தீவு மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான பதிவுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி புத்தளத்தில் அமைந்துள்ள வடக்கு இடம்பெயர்ந்த முஸ்லிம் செயலகத்தில் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழ் மக்களின் பிரச்சினையில்...

பின்பான ஒரு வருட பகுதியில் தமிழ் மக்களைச் சரியான முறையில் மீள்குடியேற்ற, அவர்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க இலங்கை அரசு தவறி விட்டதென்பதையும் இந்திய மத்திய அரசு இது தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் போதாதென்றும் இந்தியாவால் கொடுக்கப்பட்ட உதவிகளும் அவர்களைச் சரியான முறையில் சென்றடையவில்லை என்பதையும் அவர்களது தீர்மானத்தில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

உண்மை நிலை அது மாத்திரமல்ல. அதிலும் விடக் கொடியதென்பதை வன்னியில் மீள்குடியேற்றங்களைச் சென்று பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அறியக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்யும் சமயத்தில் தமிழ் மக்கள் படும் வேதனைகளை புதுடில்லியின் கவனத்திற்குக் கலைஞர் கொண்டு வந்துள்ளமையை வரவேற்பதுடன் அவருக்கு எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று விடுதலைப்புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர். யுத்தம் முடிபடைந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதென இலங்கை அரசு கூறுகின்றது.

ஆனால் வடக்குக் கிழக்கு இன்னும் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பில்தான் உள்ளது. இராணுவத்திற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் தமிழ்ப் பிரதேசங்களில் சுவீகரிக்கப்படுகின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேற முடியவில்லை. யுத்தம் முடிந்து ஒரு வருடமாகியும் சாதாரண சூழல் இன்னும் தோற்றுவிக்கப்படவில்லை.

இதேபோன்று இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களும் பிரிக்கப்பட்டு விட்டன.

அதிகாரங்களைத் தமிழ் மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் அரசாங்கம் எந்தவித நாட்டமும் அற்றே செயற்பட்டு வருகின்றது. யுத்தம் முடிந்து விட்டாலும் இனப்பிரச்சினை என்பது இன்னும் கொழுந்து விட்டு எரியும் நெருப்பாகவே இருக்கின்றது.

இந் நிலையில் தமிழ் மக்கள் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக் கூடிய வகையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளவும் தமது மண்ணைப் பாதுகாத்து மொழியைப் பாதுகாத்து தமிழர் தலை நிமிர்ந்து வாழும் நிலையை உருவாக்கவும் கலைஞர் அவர்கள் தமது முழுமையான பட்டறிவைப் பயன்படுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றது என்றுள்ளது. (ச-5)

# மனித உரிமை விசாரணைக்...

ஜனாதிபதியினால் உதலாகம ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவானது இரண்டு வருடங்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் வெளிநாடுகளின் உதவியுடன் செய்ம்மதி தொடர்பாடல் மூலம் பல சாட்சியங்கள் பெறப்பட்டும் விசாரணைகளை நடத்தியது.

இந்த விசாரணையில் திருகோணமலையில் 5 கல்லூரி மாணவர்களின் கொலை பிரதான இடம் பிடித்ததுடன் மேலும் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டது.

பின்னர் இதன் செயற்பாடு முடக்கத்திலிருப்பதாகவும் இந்த விசாரணைகளின் மூலம் யாரேனும் கைது செய்யப்படவோ, தண்டிக்கப்படவோ இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னர் அமைக்கப்பட்ட ஆணைக்குழு இவ்வாறு முடங்கிப் போயுள்ள நிலையில் தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எந்தளவுக்கு உண்மையாகவும், உறுதியாகவும், இறுதி வரை இடம்பெறும் என்பதில் தமக்குப் பாரிய சந்தேகமும் அச்சமும் காணப்படுவதாக அவர் மேலும் கூறினார். (ச-5)

# இரண்டாம்...

காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 70 வருடங்களுக்குப் பின்னர் இக்குண்டு வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஜனாதிபதி மகிந்தவுடன் பேச...

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விரைவில் சந்திக்கவுள்ளதாகவும் கூறப்பட்டது. என்றாலும் இரு வாரங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை அவரைச் சந்திப்பதற்கான அழைப்பு அரச தரப்பிலிருந்து வெளிவரவில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது தகவல்களை வெளியிடுவது பொருத்தமாக இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மூலமாக ஏற்படுகின்ற ஒரு தீர்வு என்னவிதமாக அமையலாம் என்பது பற்றி அந்தக் கூட்டத்தில் ஒரு ஆரம்பப் பரிசீலனை செய்யப்பட்டதாக மட்டுமே தற்போது கூற இயலும் என்றும் சம்பந்தன் கூறுகின்றார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணும் நோக்கில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராக இருப்பதை நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு தாங்கள் தெரிவித்திருந்ததை இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டுகின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது பிரேரணைகளை இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்னர் அவரிடம் விவாதிக்க வேண்டும் என இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது என்று வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை என்றும் சம்பந்தன் கூறுகின்றார்.

எனினும் பல விடயங்கள் தொடர்பில் தமது தரப்பு இந்தியாவுடன் பேசி வருவதாகவும் அவர் கூறுகின்றார். இலங்கை ஜனாதிபதி இம் மாதம் 8 ஆம் திகதி புதுடில்லியில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(ச-5,9)


மருத்துவமனை திறப்பு விழா

நிகழும் மங்கலகரமான விகிர்தி வருடம்
வைகாசி மாதம் 20 ம் நாள் (03.06.2010)
இன்று வியாழக்கிழமை பகல் 10.45 மணி
முதல் 12.00 மணிவரை வரும் சுபவேளையில்

வண் மேற்கு வைத்தியசாலை

VAN WEST CLINIC AND NURSING HOME

எனும் நிறுவனத்தினை பெரியோர்களின் ஆசியுடன் ஆரம்பித்து வைக்க உள்ளோம். இவ் வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதம விருந்தினர்**
வைத்தியகலாநிதி A. கேதீஸ்வரன் அவர்கள்
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்)

**சிறப்பு விருந்தினர்**
வைத்தியகலாநிதி T.கங்காதரன் அவர்கள்
(முன்னைனாள் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்)
(யாழ்.போதனா வைத்தியசாலை)
Van West Clinic and Nursing Home நிறுவுநர்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு. K.N. இராஜரட்ணம் அவர்கள்
(உரிமையாளர், வனிக்கா மெடிக்கல்ஸ்)
செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
(அதிபர், ஸ்கந்தவரோதய கல்லூரி)

18, ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(தட்டாதெருச் சந்திக்கு அண்மையில்)

இங்ஙனம்
S.தனபாலசிங்கம் தம்பதிகள்
M.நவநாதன் தம்பதிகள்
(Prop.Apolo Nursing Home)

(1617) 021 222 1697


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.